# தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரஹம்.

மகாத்மா காந்தி எழுதியது.

## நான்காம் அத்தியாயம்

### நேட்டால்இந்தியர்களின் குறைகள்.

நேட்டால் வெள்ளைத் தோட்டக்காரர் அடிமைகளையே வேண்டினர். ஒப்பந்தக் காலத்தில் ஊழியம் செய்த பிறகு, மிகச் சிறு அளவிலும் தங்களுடன் போட்டி யிடக்கூடிய தொழிலாளர் அவர்களுக்குப் பிடிக்கவில்லை. இந்தியாவில் விவசாயத்திலோ, பிற தொழில்களிலோ வெற்றி பெறாதவர்களே ஒப்பந்தத் தொழிலாளிகளாக நேட்டால் சென்றனர் என்பது உண்மையே. எனினும், அவர்களுக்கு விவசாய அறிவு இல்லை யென்றாவது நிலத்தின் அருமையை அவர்கள் அறிந்திருக்கவில்லை யென்றாவது எண்ணக்கூடாது. நேட்டாலில் கறிகாய்ச் செடிகள் மட்டும் பயிர் செய்தால் நல்ல வருவாய் சம்பாதிக்கலாமென்றும், தங்களுக்குச் சொந்தமான நிலம் கொஞ்சம் இருந்தால் இன்னும் லாபம் அதிகமாயிருக்குமென்றும் அவர்கள் கண்டார்கள். ஆதலின் பலர் ஒப்பந்தக்காலம் முடிந்ததும் ஏதோ சிறு தொழில் ஒன்று தொடங்கி நடத்தலாயினர். மொத்தத்தில் நேட்டால் வெள்ளைக்காரர்களுக்கு இஃது அநுகூலமே யாகும். திறமையுள்ள குடியானவர்கள் இல்லாத காரணத்தினால் இதற்கு முன் பயிர் செய்யப்படாதிருந்த பலவகைக் கறிகாய்கள் இப்போது கிடைத்தன. இதற்கு முன் சிறிதளவு கிடைத்தவையும் இப்போது ஏராளமாகக் கிடைக்கலாயின. இதன் பயனாகக் கறிகாய்களின் விலை பெரிதும் குறைந்தது. ஆனால் வெள்ளைத் தோட்டக்காரர்களுக்கு இவையெல்லாம் சிறிதும் பிடிக்கவில்லை. தங்களுடைய ஏகபோக உரிமை என்று அவர்கள் நினைத்தனர். ஆதலின் ஒப்பந்தம் நீங்கிய இவ்வேழைத் தொழிலாளிகளுக்கு விரோதமாக ஓர் இயக்கம் காணப்பட்டது. ஒரு புறத்தில் தொழிலாளர்கள் இன்னும் வேண்டும் வேண்டும் என்று இந்தியாவிலிருந்து வந்தவர்களை யெல்லாம் ஏற்றுக்கொண்ட வெள்ளைக்காரர்கள், மற்றொரு புறத்தில் ஒப்பந்தம் நீங்கிய தொழிலாளர்களைப் பல வழிகளிலும் தொந்தரவு செய்வதற்கு ஒரு கிளர்ச்சி தொடங்கினார்கள் என்று அறிய நேயர்கள் வியப்புறுவார்கள். இந்தியத் தொழிலாளர்களின் திறமைக்கும் உழைப்புக்கும் கிடைத்த வெகுமதி இதுதான்!

மேற்படி இயக்கம் பல வடிவங்களைக் கொண்டது. கிளர்ச்சிக்காரர்களில் ஒரு சாரார் ஒப்பந்தம் நீங்கப் பெற்ற தொழிலாளிகள் எல்லாரும் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்படவேண்டுமென்றும், ஆதலின் அதற்குப் பின்னர் புதிதாக வரும் தொழிலாளிகளின் ஒப்பந்தப் பத்திரத்தில், ஒப்பந்தம் நீங்கியதும் அவர்கள் அதைப் புதுப்பித்தாலன்றி இந்தியாவுக்குக் கட்டாயமாக அனுப்பி விடப்படுமென்று ஒரு புதிய நிபந்தனை சேர்க்க வேண்டுமென்றும் கூறினர். மற்றொரு சாரார், முதல் ஐந்து வருஷ காலமானதும், மீண்டும் ஒப்பந்தம் எழுதிக் கொடாத தொழிலாளிகளுக்குப் பெருந்தொகை தலைவரி விதித்துவிட வேண்டுமென்று சொல்லினர். இரு சாராருக்கும் நோக்கம் ஒன்றே. நியாயமோ, அநியாயமோ ஒப்பந்தம் நீங்கிய தொழிலாளிகள் நேட்டாலில் சுதந்திரமாய் வசிப்பது இயலாமல் செய்துவிட வேண்டுமென்பதே அந்நோக்கமாகும். இந்தக் கிளர்ச்சிக்காரர்களின் கோரிக்கைகளும் மிகவும் அநீதமாயிருந்தபடியாலும், ஒப்பந்தம் நீங்கிய தொழிலாளிகள் இருத்தலால் பொதுஜனங்கள் எல்லாருக்கும் பொருளாதாரத் துறையில் நன்மையே விளைந்தபடியாலும் கமிஷன் முன்பு சுயேச்சையாகக் கொடுக்கப்பட்ட சாட்சியம் மேற்படி கிளர்ச்சிக்காரர்களுக்கு விரோதமாகவே இருந்தது. ஆதலின் அவர்கள் தங்கள் கிளர்ச்சியினால் அப்போதைக்குத் திட்டமான பயன் எதுவும் அடையவில்லை.

ஆனால் தீ அணைக்கப்பட்ட போதிலும், பின்னால் சாம்பரை விட்டுப்போவது போல், மேற்படி கிளர்ச்சி நேட்டால் அரசாங்கத்தின் கொள்கையை ஓரளவு மாற்றுமற்போகவில்லை. அஃது இயல்பேயன்றோ? நேட்டால் அரசாங்கத்தார் தோட்டக்காரர்களிடம் நேயபாவமுடையவர். எனவே அவர்கள் இந்திய அரசாங்கத்தாருடன் கடிதப்போக்கு வரவு தொடங்கி, மேற்கூறிய இருவகைக் கிளர்ச்சிக்காரர்களின் யோசனைகளையும் அவர்களுக்குத் தெரிவித்தார்கள். ஆனால் ஒப்பந்தத் தொழிலாளிகளை முழு அடிமைகளாக ஆக்கிவிடும். அந்த யோசனைகளை இந்திய அரசாங்கம் ஒரேயடியாக ஒப்புக்கொள்ளக் கூடவில்லை. அவ்வளவு தூர தேசத்துக்கு ஒப்பந்தத்தின் கீழ் தொழிலாளிகளை அனுப்புவதற்கு ஒரே ஒரு நியாயம் அல்லது சமாதானந்தான் சொல்லக்கூடியதாயிருந்தது. அதாவது, தொழிலாளிகள் ஒப்பந்தம் முடிந்த பின்னர் சுயேச்சையடைந்து தங்கள் சக்திகளை முழுமையும் பயன்படுத்திப் பொருள் நிலையை அபிவிருத்தி செய்துகொள்ளக் கூடுமென்பதே. நேட்டால் அப்போது இன்னும் கிரௌன் காலனியாகவே இருந்தபடியால், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் குடியேற்ற நாட்டு மந்திரியே அதன் ஆட்சிக்குப் பொறுப்பு வகித்திருந்தார். ஆதலின் நேட்டால் தன்னுடைய அநீதக் கோரிக்கைளுக்கு அவ்விடத்திலிருந்தும் உதவி எதிர்பார்க்க முடியவில்லை. இதன் பொருட்டாகவும் இதுபோன்ற பிற காரணங்களுக்காகவும், நேட்டாலுக்குப் பொறுப்பாட்சி பெறுவதற்காக ஓர் இயக்கம் தொடங்கப்பட்டது. இவ்வியக்கத்தின் பயனாக 1893 ல் பொறுப்பாட்சி வழங்கவும் பட்டது. இப்போது நேட்டால் தன் வலிமையை உணரலாயிற்று. குடியேற்ற நாட்டுக் காரியாலயத்தாருக்கும் நேட்டாலின் கோரிக்கைகள் எத்தகையனவாயினும் அவற்றை ஒப்புக்கொள்ளல் கஷ்டமிலதாயிற்று.

புதிய பொறுப்பாட்சியின் கீழ் ஏற்பட்ட நேட்டால் அரசாங்கப் பிரதிநிதிகள் இந்திய அரசாங்கத்தோடு கலந்தாலோசிப்பதற்கு இந்தியா போந்தனர். ஒப்பந்தம் நீங்கிய ஒவ்வோர் இந்தியன் மீதும் வருஷத்திற்கு 25 பவுன் அதாவது 375 ரூபாய் தலைவரி விதிக்க அவர்கள் யோசனை சொன்னார்கள். இந்தியத் தொழிலாளி எவனும் அவ்வளவு அநியாய வரி கொடுத்து நேட்டாலில் சுதந்திரத்துடன் வசிக்க முடியாதென்பது வெளிப்படை. அப்போது இந்தியாவின் கவர்னர் ஜெனரலாயிருந்த லார்டு எல்ஜின் அத்தொகை மிக அதிகமென்று கருதினார். கடைசியாக வருஷத்தில் மூன்று பவுன் தலைவரி விதிப்பதற்கு அவர் இசைந்தார். இது, ஒப்பந்த முறையின் கீழ் ஏறக்குறைய ஆறு மாத வருமானத்துக்குச் சமமாகும். இவ்வரி தொழிலாளிக்கு மட்டுமன்று; அவன் மனைவி மீதும், 13-வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு பெண் குழந்தை மீதும், 16 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வோர் ஆண் குழந்தை மீதும் அவ்வரி விதிக்கப்பட்டது. மனைவியும் இரண்டு குழந்தைகளும் இல்லாத தொழிலாளியும் வருஷம் 12 பவுன் வரி கட்ட வேண்டியிருந்தது. இந்த வரியினால் ஏற்பட்ட கஷ்டங்களை விவரித்தல் இயலாத காரியம். அக்கஷ்டங்களை அநுபவித்தவர்களுக்கே அவற்றின் கொடுமை தெரியும். அவர்களுடைய துயரங்களை நேரில் பார்த்தவர்களே அவற்றைப்பற்றி ஓரளவேனும் அறிந்து கொள்ள முடியும். நேட்டால் அரசாங்கத்தின் இந்தச் செயலை எதிர்த்து இந்தியர்கள் பலமான கிளர்ச்சி செய்தார்கள். ஏகாதிபத்திய அரசாங்கத்துக்கும், இந்திய அரசாங்கத்துக்கும் மகஜர்கள் அனுப்பப்பட்டன. ஆனால் மேற்சொன்னவாறு வரியின் தொகை குறைந்த அளவிலன்றி வேறுபயன் விளையவில்லை. பாவம்! ஏழைத் தொழிலாளிகள் என் செய்வார்கள்? அவர்களுக்கு முதலில் விஷயமே விளங்கியிராது. அவர்களின் சார்பாக இந்திய வியாபாரிகளே தேசபக்தியினாலும், ஜீவகாருண்யத்தினால் தூண்டப் பெற்றுக் கிளர்ச்சி செய்து வந்தார்கள்.

சுதந்திர இந்தியர்களின் நிலையும் இவ்வளவு கேவலமாகவே இருந்தது. அவர்களுக்கு விரோதமாக நேட்டாலின் ஐரோப்பிய வியாபாரிகள் பெரிதும் மேற் கூறிய காரணங்களுக்காக அதே விதமான கிளர்ச்சி செய்யலானார்கள். அப்போது இந்திய வியாபாரிகள் நேட்டாலில் நன்கு நிலைபெற்றிருந்தனர். நல்ல இடங்களில் அவர்கள் நிலங்கள் வாங்கிச் சேர்த்திருந்தார்கள். விடுதலைபெற்ற தொழிலாளிகளின் தொகை அதிகமாக ஆக, அவர்களுக்குத் தேவையான சாமான்களுக்குக் கிராக்கியும் அதிகமாகி வந்தது. அரிசி மூட்டைகள் இந்தியாவிலிருந்து ஆயிரக்கணக்கில் தருவிக்கப்பட்டு நல்ல லாபத்திற்கு விற்கப்பட்டன. இந்த வியாபாரம் பெரிதும் இந்தியர் கையிலேயே இருத்தல் இயல்பேயன்றோ? இஃதல்லாமல், ஸுலூக்களுடன் வியாபாரத்தில் பெரும்பகுதியும் இந்தியர் கைக்கே வந்தது. இவ்வாறு இந்திய வியாபாரிகள் வெள்ளைக்காரச் சிறு வியாபாரிகளின் கண்ணை உறுத்தலானார்கள். மற்றும், ஆங்கிலேயர் சிலர் இந்திய வியாபாரிகளுக்கு, சட்டப்படி நேட்டால் சட்டசபைத் தேர்தலில் வாக்குக் கொடுக்கவும், அபேட்சகராய் நிற்கவும் அவர்க்குரிமையுண்டென்பதை எடுத்துக்காட்டிவிட்டனர். எனவே சில இந்தியர்கள் தங்கள் பெயர்களை வாக்காளர் ஜாபிதாவில் பதிவு செய்து கொண்டார்கள். இதன் காரணமாக நேட்டால் அரசியல் வாதிகளும் இந்தியர்களுக்கு விரோதமான கட்சியில் சேர்ந்து கொண்டனர். இந்தியர்களின் மதிப்பு அதிகமாகி, அவர்கள் நேட்டாலில் பலம் பெற்றுவிட்டால் வெள்ளைக்காரர்கள் அவர்களுடன் போட்டியிட்டு வெல்ல முடியுமாவென்று அவர்கள் சந்தேகித்தனர். ஆகவே, நேட்டாலின் ஜனப்பொறுப்பரசாங்கம் சுதந்திர இந்தியர்கள் விஷயத்தில் முதன் முதலாக எடுத்துக் கொண்ட நடவடிக்கை யாதெனில், அப்போது முறைப்படி வாக்காளர் ஜாபிதாவில் பதிவு செய்யப்பட்டவர்கள் தவிர மற்ற ஆசியாக்காரர் எவருக்கும் வாக்குரிமை கிடையாதென்னும் சட்டம் இயற்றத் தீர்மானித்ததேயாகும்.

இந்நோக்கங் கொண்ட மசோதா நேட்டால் சட்டசபையில் 1894-ல் முதன் முதலாகக் கொண்டு வரப்பட்டது. அம்மசோதா இந்தியர்களுக்கு அவர்கள் இந்தியர்கள் என்ற காரணத்தினால் வாக்குரிமை மறுப்பதென்னும் கொள்கையை அடிப்படையாகக்கொண்டது. நேட்டாலில் சாதி வேற்றுமைக் கொள்கையுடன் கொண்டுவரப்பட்ட முதலாவது மசோதா அதுதான். இந்தியர்கள் அதை எதிர்த்தார்கள். ஒரே நாள் இரவில் ஒரு விண்ணப்பம் தயார் செய்யப்பட்டு அதற்கு 400 கையொப்பங்களும் வாங்கப்பட்டன. அவ்விண்ணப்பம் நேட்டால் சட்டசபையில் சமர்ப்பிக்கப்பட்ட போது அச்சபையார் திடுக்கிட்டுப் போயினர். எனினும், மசோதா என்னவோ நிறைவேறிவிட்டது. பின்னர், அப்போது குடியேற்ற நாட்டு மந்திரியாயிருந்த லார்டு ரிப்பனுக்குப் பதினாயிரம் கையொப்பங்கள் அடங்கிய மகஜர் அனுப்பட்டது. பதினாயிரம் கையொப்பங்கள் எனில், ஏறக்குறைய அச்சமயத்தில் நேட்டாலிலிருந்த சுதந்திர இந்தியர் அனைவருமாவர். லார்டு ரிப்பன் மசோதாவை நிராகரித்து, சட்டத்தில் நிற வேற்றுமை ஸ்தாபிப்பதற்கு பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அரசாங்கம் சம்மதிக்க முடியாதென்று கூறினார். இஃது இந்தியர்களுக்கு எவ்வளவு மகத்தான வெற்றி என்பதை வாசகர்கள் பின்னால் நன்குணருதல் கூடும். ஆதலின் நேட்டால் அரசாங்கத்தார் மற்றொரு மசோதா கொண்டு வந்தனர். இதில் நிற வேற்றுமை நீக்கப்பட்டிருந்ததாயினும், மறை முகமாக இந்தியர்களை வாக்குரிமைக்குத் தகுதியற்றவர்களாகச் செய்ய உத்தேசிக்கப்பட்டது. இந்தியர்கள் இதையும் எதிர்த்துக் கிளர்ச்சி செய்தார்கள். ஆனால் இக்கிளர்ச்சி வெற்றிபெறவில்லை. இந்தப் புதிய மசோதா பொருள் விளக்கமில்லாததாயிருந்தது. அதன் பொருளை விளக்கும் பொருட்டு பிரிவி கௌன்சில் ஜூடிஷியல் கமிட்டி முன்பு இந்தியர் கடைசியாக அதைக் கொண்டு போயிருத்தல் கூடும். ஆனால் அவ்வாறு செய்தல் உசிதமென்று அவர்கள் கருதவில்லை. இவ்வாறு அவர்கள் முடிவற்ற விவகாரத்தில் சிக்கிக்கொள்ளாமலிருந்தது முற்றிலும் சரியென நான் கருதுகிறேன். நிறத்தடை ஏற்படாமல் தடுத்தது சிறு காரியமன்று. ஆனால் தோட்டக்காரர்களும், நேட்டால் அரசாங்கமும் அவ்வளவுடன் நின்று விடுவார்களா?

இந்தியர்களின் அரசியல் வலிமையை முளையிலேயே கிள்ளிடுவது அவர்களுக்கு இன்றியமையாத முதல் படியாயினும், அவர்களுடைய முக்கிய நோக்கம் இந்திய வியாபாரத்தையும், இந்தியர்கள் சுயேச்சையாகக் குடி புகுவதையும் தடுத்தலேயாகும். கோடிக்கணக்கில் ஜனத்தொகையுள்ள இந்தியா நேட்டால் மீது படையெடுத்தால், அங்குள்ள வெள்ளைக்காரர்கள் இருந்த விடந் தெரியாமற் போகலாமென்று அவர்கள் பயந்தார்கள். நேட்டாலின் அப்போதைய ஜனத்தொகை சுமாராகப் பின்வருமாறு:—4 லட்சம் ஸுலூக்கள்; 40,000 வெள்ளைக்காரர்கள்; 60,000 இந்திய ஒப்பந்தத் தொழிலாளிகள்; 10,000 ஒப்பந்தம் நீங்கிய தொழிலாளிகள்; 10,000 சுதந்திர இந்தியர்கள். வெள்ளைக்காரர்களின் பயத்துக்கு ஆதாரம் எதுவும் கிடையாது. ஆனால் இன்னதென்று தெளிவாய் விளங்காத அச்சங் கொண்டவர்களை விவாதத்தினால் திருப்புவது இயலாதகாரியம். இந்தியாவின் திக்கற்ற நிலைமையும், இந்தியர்களின் வழக்க பழக்கங்களும் அவர்களுக்குத் தெரியா. ஆதலின், இந்தியர்களும் தங்களைப் போலவே புதிய துறைகளில் துணிந்திறங்குபவர்களென்றும், சாமர்த்தியமுள்ளவர்களென்றும் அவர்கள் எண்ணினார்கள். இந்நிலையில் அவர்கள் தங்களுடைய சிறு தொகையை இந்தியாவின் ஜனத்திரள்களுடன் ஒப்பிட்டுத் தங்களுக்குத் தாங்களே ஒரு பூச்சாண்டியை சிருஷ்டித்துக் கொண்டார்களெனில் அவர்கள் மீது குற்றம் சொல்வதற்கிடமில்லையன்றோ? இஃது எங்ஙனமாயினும், வாக்குரிமை பறிக்கும் மசோதாவை எதிர்த்து வெற்றி பெற்றதின் பயனாக, நேட்டால் சட்டசபை இயற்றிய மற்றும் இரு சட்டங்களிலும் ஜாதி வேற்றுமையை நேரே புகுத்த முடியாமல் போயிற்று. மறை முகமான வழியினாலேயே இச்சபை தன் நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள வேண்டியதாயிருந்தது. ஆதலின், நிலைமை எவ்வளவு கேவலமாக ஆகியிருக்கலாமோ அவ்வளவு கேவலமாகவில்லை. இப்போதும், இந்தியர்கள் உறுதியுடன் எதிர்த்தார்களாயினும் அவ்விரண்டு சட்டங்களும் நிறைவேறியே விட்டன. அவற்றுள் ஒன்று இந்திய வியாபாரத்திற்குக் கடுமையான நிர்ப்பந்தங்களை ஏற்படுத்திற்று. மற்றொன்று நேட்டாலில் இந்தியர் வந்து குடியேறுவதற்கு நிர்ப்பந்தங்கள் விதித்தது. முதல் சட்டத்தின் முக்கியாம்சம் என்னவெனில், அச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்படும் உத்தியோகஸ்தரின் அநுமதிப் பத்திரம் (லைஸென்ஸ்) இல்லாமல் யாரும் வியாபாரம் செய்யக் கூடாதென்பது தான். அனுஷ்டானத்தில் வெள்ளைக்காரன் எவனுக்கும் அநுமதிப்பத்திரம் உடனே கிடைத்தது. இந்தியனுக்கு அப்பத்திரம் கிடைப்பதில் ஏற்பட்ட தொல்லைகளைச் சொல்லமுடியாது. இதற்காக வக்கீல் வைத்துப் பணச் செலவு செய்ய வேண்டியிருந்தது. செலவு செய்ய முடியாதவர்களுக்குப் பத்திரமும் இல்லை. மற்றச் சட்டத்தின் முக்கியாம்சம், ஐரோப்பிய பாஷையொன்றில் தேர்ச்சி பெற்றவர்களே நேட்டாலில் பிரவேசித்து அங்கு குடியேறலாம் என்பதாகும். இச்சட்டம் கோடிக்கணக்கான இந்தியர்களுக்கு நேட்டாலின் கதவுகளை மூடியேவிட்டது. நேட்டால் அரசாங்கத்துக்கு நான் அநீதி செய்யக்கூடாதாதலின் ஒரு விஷயம் இங்கே குறிப்பிடவேண்டும். மேற்படி சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பு மூன்று ஆண்டுகள் நேட்டாலில் வசித்த இந்தியர்கள் நேட்டால் குடிகள் என்னும் அத்தாட்சிப் பத்திரம் பெறலாமென்றும், இப்பத்திரமுள்ளவன் தன் மனைவி, குழந்தைகளுடன் மேற்படி கல்வித்தேர்ச்சி நிர்ப்பந்தமின்றி எப்போதும் நேட்டாலை விட்டு வெளியே சென்று திரும்பி வரலாமென்றும் அச்சட்டத்தில் விதிகள் ஏற்பட்டிருந்தன.

(இதன் தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# நாடார்களும், தேவஸ்தானக் கமிட்டியும்.

## கமிட்டி அங்கத்தின ராகலாமா?

## மந்திரி ரங்நாத முதலியாரின் தடுமாற்றம்.

## நாடார்களே! இந்த சோதனை காலத்தில் கிளர்ச்சி செய்யுங்கள்; எழுச்சி கொள்ளுங்கள்.

### நாடார் துயரம்.

5—3—28—ல் வெளியான "தமிழ் நாடு" உப தலையங்கத்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது.

ஹிந்து தேவஸ்தான தர்ம பரிபாலனச் சட்டம் அமுலுக்கு வந்த பிறகு, வெளுக்கக்க சில விஷயங்கள் தலை தூக்க ஆரம்பித்திருப்பது விசனிக்கத் தக்கதாகும். நட்ட கல்லைத் தெய்வமென்று நம்புபவர் முதல், உயர்ந்த அத்வைத ஜீவன் முக்தர் வரையில் பல கோடி மக்கள் ஹிந்து சமூகத்தில் அடங்கியிருக்கின்றனர். ஈசுவரன் சந்நிதானத்தில் உயர்வு தாழ்வு இல்லை. சம்பிரதாய பேதமில்லை; தோட்டி முதல் தொண்டையான் வரையில் பகவத் திருஷ்டியில் ஒன்றே யாவர். பாழான, வர்ணாசிரம அதர்மத்தின் மேலீட்டினால், பிராமணன் உயர்ந்தவன்; பஞ்சமன் தாழ்ந்தவன் என்றதோர் எண்ணம் இந்நாட்டில் வளர்ந்து விட்டது. ஜாதி வேற்றுமை என்பது கானல் ஜலம் போன்ற, வைதீகர்கள் எவ்வளவு பகீரதப் பிரயத்தனம் செய்தாலும், வேற்றுமை உண்டு என்ற சித்தாந்தத்தை நிலை நிறுத்த முடியாது. துருப் பிடித்துப் போன பழைய ஏடுகளில் சிலவற்றை இவர்கள் ஆதாரமாகக் காட்டலாமே ஒழிய, நீதி முறைப்படி ஸ்தாபிக்க முடியாது. சைவர்களும், வைஷ்ணவர்களும் வர்ணாசிரமத்தை எவ்வளவோ எதிர்த்து வந்திருக்கிறார்களாயினும், ஹிந்து ஜன சமூகத்தில் ஏறிய வர்ணாசிரம விஷம் தொலைந்த பாடில்லை. அதற்குக் காரணம் பிரிட்டிஷ் சர்க்காரே யாகும். ஜாதி வேற்றுமைகள் இந்நாட்டில் உள்ள வரையில், தங்கள் ஆட்சிக்கு ஆதரவுண்டு என்பதை பிரிட்டிஷ் சர்க்கார் நன்கறிவார்கள். மறைவாகவும், சில சமயங்களில் பகிரங்கமாகவும் வேற்றுமைகளை நிலை நிறுத்த சர்க்கார் செய்து வரும் சூழ்ச்சிகள் யாவரும் அறிந்த சங்கதி யாகும். சென்னை சர்க்காரில் தற்சமயம் மந்திரி பதவிகளில் அமர்ந்திருக்கிற ஸ்ரீ. சுப்பராயன், ஸ்ரீ. ரங்கநாதன், ஸ்ரீ. ஆரோக்கியசாமி ஆகிய இவர்கள் ஜாதி வேற்றுமை யற்றவர்கள் என்பதை நாம் அறிவோம். ரங்கநாதனும், சுப்பராயனும் அறவே ஜாதி வேற்றுமைகளைத் துறந்தவர்கள். அப்படியிருந்தும், சர்க்காரின் சூழ்ச்சிக்கு இவர்களும் ஆளாகி விட்டது மிகவும் கண்டிக்கத் தக்க விஷயமாகும். "சூத்திரன்" என்ற பதத்தை, தமது அறிக்கையில், டாக்டர். சுப்பராயன் சென்ற வருஷம் உபயோகித்ததை நண்பர்கள் அறிவார்கள். ஸ்ரீ. ரங்கநாத முதலியாரும், இந்த பாவத்தில், ஒரு பாகத்தைக் கட்டிக் கொண்டு விட்டார். ஹிந்து தேவஸ்தான பரிபாலனம், மந்திரி ஸ்ரீ ரங்கநாதன் பொறுப்பிலிருக்கிறது. அவர் மனம் வைத்து உறுதியாக வேலை செய்தால், வர்ணாச்சிரமக் கொடுமையில் சிக்கித் தவிக்கும் ஹிந்து சமூகத்தின் விடுதலைக்கு வழி கோலலாம். அதை விட்டு, சர்க்கார் மாமூல் படி நடப்பதென்பது ரங்கநாத முதலியாரின் உயர்ந்த கொள்கைக்கு உற்றதல்ல. தஞ்சாவூர் ஜில்லாவில் தேவஸ்தானக் கமிட்டியில் நாடார்களை நியமிக்கலாமா; கூடாதா என்பதைத் தெரிவிக்கும்படி கமிட்டியாரை, மந்திரி கேட்டிருக்கும் விஷயத்தை வேறொரு பக்கத்தில் காணலாம். நாடார்களும் ஹிந்துக்கள். மிகவும் பற்றுள்ள சைவ பக்தர்கள். ஆலய தரிசனமும், தேவஸ்தான கமிட்டியில் ஸ்தானமும அவர்களுடைய பிறப்புரிமையாகும். சில ஹிந்துக்கள் இரண்டொரு ஜில்லாக்களில், அநீதியாக இதை ஆட்சேபித்தாலும், நாடார்களுடைய பாத்தியதைகளை ஸ்தாபித்துப் பாதுகாக்க வேண்டியது சர்க்கார் கடமையாகும். பகைவனை பஞ்சாங்கம் கேட்டால், மத்தியானம் மரண மென்பான். ஆகவே அநீதியைத் தர்ம மென்று நினைத்துக் கொண்டிருக்கும் வைதீகர்களிடம் அபிப்பிராயம் கேட்பது ஒழுங்கல்ல வென்பதை மந்திரி—முதலியார் அறிய விரும்புகிறோம். கமிட்டியில் யாராவது ஆட்சேபித்தாலும், அவ்வித வைதீகர்கள் ராஜிநாமாக் கொடுத்து விட்டு, ஒடும்படியான நிலைமையை உண்டு பண்ண வேண்டுமே ஒழிய மூடப் பிடிவாதத்திற்கு நல்ல மந்திரிகள் இடம் கொடுக்கவே கூடாது. நாடார்—நாடார் அல்லாதார் என்ற பேத மில்லாத தஞ்சை ஜில்லாவில், புதிய தொரு தொல்லையை உண்டாக்குவது பெரிய பாவமாகும். ஸ்ரீ. ரங்கநாத முதலியார், இவ் விஷயத்தில் தைரிய மாகவும், நீதி யாகவும் நடந்து கொள்வார் என்று எதிர்பார்க்கிறோம்.

### மந்திரியின் மயக்கம்.

உருத்திராக்கப் பூனைகள் நிறைந்திருக்கும் பிரம்மஞான சங்கத்தைச் சேர்ந்த திரு. அரங்கநாத முதலியார் அவர்கள் தனது அந்திக்காலத்தில் மயக்குண்டிருப்பதாக அறிகிறோம். உலக சமாதானத்தை நாட்டி உழைப்பதாகச் சொல்லிக்கொள்ளும் அடையார் அம்மையாரின் சிஷ்யர்களின் சாயம் வெளுக்க ஆரம்பித்துவிட்டது. அம்மையாரின் சிஷ்யர்களுள் ஒருவரான நமது மந்திரியாருக்கு தஞ்சை ஜில்லா தேவஸ்தான போர்டில் ஓர் நாடாரை நியமனம் பண்ணலாமா என்ற சந்தேகம் உண்டாய் விட்டதாக அறிகிறோம். காரணம் நாடார்களை தேவஸ்தானக் கமிட்டியில் நியமிப்பது மத சம்மதமாகுமா என்ற அதிசயவினாவென்றே தெரிகிறது. இவ் வினாவிற்கு பொறுப்பற்ற மந்திரியார் மேற்படி ஜில்லா தேவஸ்தானக்கமிட்டி போர்டாரை விடையளிக்குமாறு கேட்டிருக்கின்றார். அக்கேள்விக்கு துவேஷ புத்தியுள்ள மதியற்ற மேற்படி போர்டார் நாடார்களை நியமிப்பது மத விரோதமாகும் என்று பதில் இறுத்திருக்கின்றனராம்.

அந்தோ! மந்திரியார் இவ்வாறு அசட்டுத்தனமான கேள்வி கேட்டதற்குக் காரணமென்ன? தன் மந்திரி ஸ்தானத்தை அரண் செய்துகொண்டிருக்கும் அரசியல் பார்ப்பனரின் அற்ப துர்ப்போதனையா? மனத்தடுமாற்றமா? அல்லது உத்தியோகமதையா? எவ்வாறெனினும் மந்திரியாரின் செய்கையானது கண்டிக்கத்தக்கதாகும். கும்பகோணம் தேவஸ்தானக் கமிட்டியில் காலஞ்சென்ற ஸ்ரீமான் பொன்னுச்சாமிநாடார் அவர்கள் 30 ஆண்டுகளாக ஸ்தானம் வகித்து நிர்வாகம் [illegible]

இவ்விஷயத்தை திரு. முதலியார் அவர்கள் அறியாரோ? நிதரிசனமான ஒரு விஷயத்தை அறியாதவர்க்கு மந்திரி ஸ்தானம் எதற்கு? ஜெய் சீத்தாராம் என்று சொல்லி தன் ஸ்தானத்தை ராஜிநாமாப் பண்ணி பெசண்டம்மையைச் சார்தலே மந்திரியார் அவர்களுக்கு உத்தமம். இவ்விஷயத்தில் மந்திரியார் நெறிதவறியதுடன் நாடார்களுக்கு பெருந் தீங்கிழைத்த பாவத்திற்கும் ஆளாகின்றார் என்பதை கனம் அரங்கநாத முதலியார் அவர்களுக்கு அறிவித்துக் கொள்ளுகிறோம். ஆதையால் இப்புண்ணை நிவர்த்தி செய்வதற்கு மேற்படி போர்டில் ஓர் நாடாரை அவசியம் நியமிக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறோம். கூடிய சீக்கிரம் மேற்படி போர்டில் ஓர் நாடாரை நியமிப்பதற்கு மந்திரியார் உடனே ஏற்பாடு செய்வாராக. இன்றேல் திரு. முதலியார் அவர்களை நாடார் உலகம் பழிக்குப்பழி வாங்காமல் விடாது.

முடிவில் தஞ்சை ஜில்லா தேவஸ்தான போர்டார் ஒழுங்கற்றதும் அக்கிரமமுமான தீர்மானத்தை நிறைவேற்றி மந்திரிக்கு அனுப்பியதை இந்திய ரத்தம் ஓடும் எவரும் கண்டிக்காமல் இரார். அந்தோ! சகோதரத்துவப் பிரசாரம் வீறிட்டு நடந்து கொண்டிருக்கும் இக்காலத்திலா துவேஷபுத்தி வேண்டும்? தஞ்சை ஜில்லா தேவஸ்தான போர்டாரே! உம் மதியற்ற தீர்மானத்தை மறுபடியும் உற்று நோக்கும். இம்மாதிரி ஜாதி இறுமாப்பும் துவேஷ புத்தியும் அகந்தையுமுள்ள நமக்கா சுயராஜ்யம் வேண்டும்? பலே பலே! சுயமரியாதைக்குப் பின் அன்றோ சுயராஜ்யம்!

இரு நாடார்கள்.

### தேவஸ்தானக் கமிட்டி நியமனத் தொல்லை.

2-3-28 வெள்ளிக்கிழமை மாலை 6-மணிக்கு கும்பகோணம் மகாஜன சங்க கட்டட மேல் மாடியில் வாலிப நாடார் சங்கம் ஆதரவில் ஓர் பெரும் மகாநாடு கூட்டப்பெற்றது. பொது ஜனங்கள் ஏராளமாக விஜயம் செய்திருந்தனர். சங்கக் காரியதரிசி ஸ்ரீ.வி. சின்னத்தம்பி நாடார் அவர்களால் பிரரேபிக்கப்பட்டு தலைவர் ஸ்ரீ. எஸ். தங்கவேலு நாடார் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு திருவாளர் ஆர். சி. வெங்கிட்டராமநாயுடு அவர்கள் அவைத் தலைமை வகித்து முகவுரையாக நீண்ட நேரம் நாடார்களைப் பற்றி தஞ்சை சர்க்கிள் தேவஸ்தான கமிட்டியார் கூறியிருக்கும் பொய் மூதாந்திரத்தை விளக்கி, கனம் மந்திரியின் நடத்தையைக் கண்டித்துப்பேசிய பின் ஸ்ரீ. வி.சின்னத்தம்பிநாடார் அவர்களால்கீழ்க்கண்ட தீர்மானங்கள் பிரரேபிக்கப்பட்டு ஸ்ரீ. எஸ். தங்கவேலு நாடார் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஸ்ரீ. கே. ஜி. வெங்கடாசல நாடார் அவர்கள் ஆமோதித்துப் பேசிய பின் பொதுஜனங்களால் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. பின் தலைவர் முடிவுரையாக வெகு நேரம் பேசிய பின் ஸ்ரீ. கே. ஜி. வெங்கிடாசல நாடார் அவர்கள் வந்தனோபசாரம் கூறிய பின் சபை இனிது நிறைவேறியது.

1. சென்னை அரசாங்கத்தார் தஞ்சை சர்க்கிள் தேவஸ்தான கமிட்டிக்கு நாடார் வகுப்பினரில் ஒருவரை அங்கத்தினராக நியமிக்கலாமா வென்று ஷை கமிட்டி அங்கத்தினர்களை ஆலோசனை கேட்டதற்கு ஷை கமிட்டியார், அவ்விதம் நியமிப்பது வழக்கத்திற்கு விரோதமென்றும், பலரது மதவுணர்ச்சி பாதிக்கப்படுமென்றும், ஆகையினால் அவ்விதம் தாங்கள் சிபார்சு செய்ய முடியாதென்றும் அரசாங்கத்தாருக்கு தெரிவித்திருப்பதை, இக்கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதுடன் ஷை கமிட்டியாரின் செயலானது தேச உண்மையான முன்னேற்றத்திற்கும்சகோதரத்துவம், சமத்துவம் ஆகிய வளர்ச்சிக்கும் இதுவரை இந்த ஜில்லாவில் இருந்து வரும் அனுஷ்டானத்திற்கும் முற்றிலும் விரோதமாக விருப்பதாகக் கருதுகிறது.

2. வகுப்பு வேற்றுமையை ஒழித்து சகோதரத்துவம், சமத்துவம் ஆகியவுணர்ச்சிகளை [illegible]

### ஆலயம் புகுந்த ஆதித் திராவிடப் பெண்.

சென்னையில் பிப்ரவரி மாதம் 17-ந் தேதி வெள்ளிக்கிழமை மாலை சில ஆதித்திராவிட சகோதரர்கள் கோயிலுக்குள் சுவாமி தரிசனம் செய்ய வேண்டித் தங்கசாலைத் தெருவிலுள்ள சுப்பிரமணியர் கோயிலுக்குள் தம்முடன் அழைத்து வந்த ஒரு ஆதித் திராவிடப் பெண்ணை மட்டும் கோயிலுக்குள் செல்லும் படிக்கும் அவ்வாறு உள்ளே செல்லுகையில் எவர்களேனும் தடுப்பார்களானால் அவர்கள் அப்பொழுது உள்ளே வருவதாயும், அதனால் அப்பெண் ஒன்றுக்கும் அஞ்சவேண்டியதில்லை யென்றும் கூறி, அப்பெண்ணைத் தைரியமாக உள்ளே போகும்படி விடுத்து அவர்கள் கோயில் வெளியே நின்றிருந்தார்கள். அப் பெண்ணைக் கண்ட அக்கோயில் குருக்கள் அவளை இன்னாரென்றறிந்ததும் மிகக் கோபத்துடன் அவள் எப்படி கோயிலுக்குள் வரலாமெனக் கேட்டு அதட்டினார். அதற்கு அப்பெண் "சாமியை கும்பிட வந்தேன். இதோ இருக்குர் தேங்காய் பழம் வைத்துக் கற்பூரத்தைக் கொளுத்துங்கோ" என்று சொன்னாள். குருக்கள் ஒன்றும் செய்வதற்கே இல்லை. நாலாபக்கமும் விழித்துப் பார்த்தார். உடனே அப்பெண்ணை யழைத்து அவள் கொணர்ந்திருந்த பழம், தேங்காய், கற்பூரம் முதலியவைகளைப் பெற்று, அவளையும் உள்ளே யழைத்துச் சென்று சுவாமி தரிசனம் செய்யச் செய்தனுப்பினர்.

தெற்கே திருநெல்வேலி, மதுரை ஜில்லா முதலான இடங்களில் இந்துக்கள் என்று அழைக்கப் பெறும் நாடாரும், மருத்துவரும், வணிகரும், ஆதித் திராவிடர்களும் இந்துக்கள் கோயிலில் செல்லக்கூடாது என்னும் கட்டுப்பாடு இன்றும் இருக்கக் காண்கிறோம். இனியேனும் அவர்கள் அனைவரும் ஒன்று கூடி மற்றவர்களைப் போன்று, அவர்களும் கோயிலுக்குள் பிரவேசிக்கத் தகுந்தவாறு விரைவில் முயற்சிப்பார்களென்று எதிர்பார்க்கிறோம். இக் குருட்டுக் குருக்கள்மாரும் கடவுள் முன்னிலையில் எல்லா மக்களும் ஓரே மக்கள் என்ற நல்லுணர்ச்சியைப் பெற்று தம் அகங்காரத்தை அறவே ஒழிப்பார்களாக.

---

ஞான சங்கத்தில் நீண்ட காலமாக ஓர் முக்கிய அங்கத்தினராக இருப்பவருமான இம்மாகாண வளர்ச்சித்துறை அமைச்சர் கனம் ஏ. ரங்கநாத முதலியார் அவர்கள், நியாயத்தைக் கருதியும், பலரது வேண்டுகோளின்படியும் இப்பொழுது இருக்கும் அங்கத்தினர்களை நியமித்தது போல் நாடார் குலத்தினர் ஒருவரையும் தஞ்சை சர்க்கிள் தேவஸ்தான கமிட்டிக்கு அங்கத்தினராகத் தானே நியமித்து தன்னுடைய சகோதர சமத்துவ உணர்ச்சியைச் செய்கையில் காட்ட முன்வராமல், மேற்படியாரை இதுபற்றி ஆலோசனை கேட்டதற்காக இக்கூட்டம் கனம் அமைச்சர் அவர்களைக் கண்டிக்கிறதென மிக்க மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறது.

3. இந்த ஜில்லாவில் தேவஸ்தான கமிட்டிக்கு பொறையார் காலஞ் சென்ற வெ. பொன்னுசாமி நாடார் அவர்கள் பொது ஜனங்களாலேயே தேர்தலில் ஓர் அங்கத்தினராக தேர்ந்தெடுக்கப்பட்டு வெகு நீண்ட காலமாக ஓர் அங்கத்தினர் பதவியை இப்போது தஞ்சை சர்க்கிள் தேவஸ்தானக் கமிட்டியில் அங்கத்தினர்களாக விருக்கும் கனவான்கள் சிலருடன் ஸ்தானம் வகித்திருந்ததுடன், இந்த ஜில்லாவில் சர்வ ஆலயங்களிலும் பிரவேச சம்பந்தமான உரிமை இருந்து வருகிறதையும மேற்படி தஞ்சை சர்க்கிள் தேவஸ்தான கமிட்டியார் மறைத்துக்கூறி இருப்பதை இம் மகாநாடு கண்டிக்கிறது.

4. மேல்கண்ட தீர்மானங்களை பத்திரிகைகளுக்கும், சம்பந்தப் பட்டவர்களுக்கும் அனுப்ப வாலிப நாடார் சங்கக் காரியதரிசிகளுக்கு அனுமதியளிக்கிறது.

காரியதரிசி,
வாலிப நாடார் சங்கம்,
[illegible]

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



சாதி குலம் பிறப்பிறப்புப் பந்த முத்தி
அருவுருவத் தன்மை நாம
ஏது மின்றி யெப்பொருட்கு மெவ்விட
த்தும் பிரிவற நின்றியக்கஞ் செய்யுஞ்
சோதியை மாற்றற வெளியை மனதவிழ
நிறைவான துரிய வாழ்வைத்
தீதில் பரமாம் பொருளைத் திருவருளே
நினைவாகச் சிந்தை செய்வாம்.

---

நாடார்குலமித்திரன்

பிரபவ ஞூ மாசி மீ உயகூ உ

# பலி யிடுதல்.

ஆலயங்களுக்கு ஆடு, கோழி முதலிய உயிர்ப் பலி யிடுதல் கூடா தென்பதைப் பற்றி முன்னிரு முறை ஒருவாறு விளக்கி யிருந்தோம். இப் பலி யிடும் வழக்கம் புராதன கால முதற் கொண்டிருந்து வருகிறதே; நம் முன்னோர்கள் தொன்று தொட்டுச் செய்து வந்த காரியமு மச்சே; அவர்களெல்லாம் அறிவிலாதவர்களா; அதை எவ்வாறு விலக்க முடியும்; கடவுளுக்குக் காணிக்கையாகத் தானே நாம் பலி யிடுகின்றோம்; அதற்கு அது விருப்ப மில்லையாயின் வேண்டாமென்று சொல்லட்டுமே எனச் சிலர் கேட்கின்றார்கள்.

எறும்பு முதல் யானை கடை எண்பத்து நான்கு லட்சம் ஜீவ பேதங்களில் மனிதப் பிறவியே மிகச் சிலாக்கியமான தெனச் சொல்லப்பட்டிருக்கிறது. என்? நன்றிது; தீ திது என்று பகுத்தறியும் விசேடத் தன்மையை மனிதன் அடையப் பெற்றிருக்கிறான். வேறெந்த ஜீவனுக்கும் பகுத்தறியும் தன்மை யிருப்பினும், அதுவும் மனிதன் என்றே கூறலாம். அதுபோல் பகுத்தறிவிலா மக்களைமாக்க ளென்றே கூறவும் வேண்டும். ஆகவே மனித வாழ்க்கையில் எத்தனையோ பழக்க வழக்கங்களிருந்து வந்தாலும் அவைகளை யெல்லாம் மனிதன் தன் விசேஷித்த அறிவைக் கொண்டு தள்ளத்தக்கது, கொள்ளத்தக்கது யாதென ஆராய்தல் வேண்டும். மனிதன் ஆராய்ச்சி முதிர்ச்சிக் கேற்ப அறிவு வளர்ச்சி யடைகிறான். மனிதன் தன்னுடைய பிரயத்தனங்களினாலே ஊழ்வினையையும் ஒருவாறு வெல்லவுங் கூடும். மனிதன் சிறு குழந்தையா யிருக்கும் போது அறியாமையால் பல அருவருப்பான செய்கைகளெல்லாம் செய்கிறான். அவன் அறிவு வளர்ச்சி யடைந்த பின்னரோ அப்படிச் செய்வதில்லை. ஆனால் மிருகமானது சிறு பிராய முதல் அந்திய காலம் வரையும் ஒரே விதத்தகாய்த் தானிருக்கிறது. ஏன்? அதற்குப் பகுத்தறியுந் தன்மை கிடையாது. மனிதனோ தந்தை, தாதலை யெனப் பக்குவமறியச் சாதனம் பெற்றிருக்கிறான். ஆகையால் எதையும் புராதன வழக்க மெனக் கொள்வதும் நம்புவதும், மூட வழக்கமும், குருட்டு நம்பிக்கையுமாகும். உயிர்ப் பலி யிடுதலால் பாவமேயன்றி வேறு பல னுண்டா வென்பதை ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். கிறிஸ்தவர், மகம்மதியர், புத்தர், சமணர் முதலியவர்களிற் பலர் மாமிசம் உண்பவர்களாயினும், அவர்களுடைய ஆலயங்களில் ஆடு, கோழிகள் பலி யிடுத லுண்டா? அல்லது சிவன், நாராயணன், விநாயகன், முருகன் முதலிய கோயில்களுக்குப் பலி யிடுத லுண்டா? மாடன், இருளன், ராக்காயி, மூக்காயி, காளி, கூளி, மாரி, கருப்பணன் முதலிய சிறு தேவதைகள் பேரால் தானே உயிர் வதைகள் செய்யப்பட்டு வருகிறது. இத் தேவதைகளுக்கும் உயிர்ப் பலி கேட்சவா யுண்டா? ஏற்க சக்தி யுண்டா? ஏற்று ஏதேனும் பதிலுக்குச் செய்ய வலிமை யுண்டா? இவையெல்லாம் மன மயக்கமன்றோ? அறியாமையன்றோ? எவ் வுயிரும் ஈசன் சன்னிதான மன்றோ? கொலை புரிதல் நன்றோ?

"கொலை வினை யராகிய மாக்கள்
புலை வினையர் புன்மை தெரிவா
[ ரகத்து"

என்ற வள்ளுவர் வாக்கை உள்ளுணர்ச்சி யுள் நோக்குதல் வேண்டும். வெகு நாட்களுக்கு முன்னரே உலகத்தில் அனேகர் ஊ னுண்டு உடல் வளர்ப்பதற்கு இதர பிராணிகளைக் கொலை செய்து வந்தாலும், கொலையை அறிவுடையோர் செய்யாமலும், செய்பவரையும், ஊ னுண்பவரையும் தடுத்துத் தான் வந்திருக்கின்றார்கள். வேத காலத்தில் பிராமணர்கள் ஊனையும், கள்ளையும் உண்டு வந்தார்கள். புத்தர் காலத்தில் அறவே ஒழித்து விட்டார்கள். புத்தர் மதக் கோட்பாடு பிராமணர் பிழைப்புக்கு ஒத்தில்லாமற் போயினும், அப் புத்த மதத்தில் மிக முக்கியமான கொல்லாமை, புலா லுண்ணாமை யெனும் ரசத்தை எடுத்துக் கொள்வதில் பிராமணர்கள் முந்திக் கொண்டார்கள். அம் மதத்தை அவர்கள் கொன்ற காலத்திலும் அத் தத்துவத்தைக் கொல்ல முடியாமல் அதை அடைந்து அதுவே அவர்களாக்கிக் கொண்டார்கள். பிராமண ரல்லாதவர்களாகிய நாம் சாத்தை அவர்கள் பால் விட்டுச் சக்கையை மென்று கொண்டிருக்கிறோம். நமக்கு இன்னும் அந்த எலும்பை எடுத்தெறிய மன மில்லை. அவர்களும், உங்கள் தலை விதியும் அதுதா னென்று சில காட்டுச் சாமிகளைக் காட்டி தீண்டாதவர்களாய் ஒதுக்கி கரையான் புற்றில் நாகப் பாம்பு நுழைந்த கதையாய் வந்து முடிந்து விட்டது. பரம் பரையாய்ப் பலி செய்த பிராமணர்கள் இப்போது விட்டு விட்டதினாற் கெட்டுப் போனார்களா? ஊனும், கள்ளும் உண்ட பிராமணர்கள் உண்ணாததினால் உடல் நலங் குன்றிச் செத்துப் போனார்களா? பலி யிட்டுக் கள்ளும், ஊனும் வைத்து யாகம் நடத்திய பிராமணர்கள் அது செய்யாததினால் அற்றுப் போனார்களா? இல்லை. அவர்கள் உலக ஜனத் தொகையில் மிகச் சொற்பமானவர்களா யிருந்தும் எல்லா வற்றிலும் உயர்ந்த ஜாதியார்களாகவும் மேலான அறிவுடையவர்களாகவும் கருதப்பட்டு அவர்களுக்கு நாம் அடிமைப் பட்டிருக்கவு மேற்பட்டிருக்கிறது. ஏன்?

"உற்ற நோய் நோன்ற லுயிர்க்
குறுகண் செய்யாமை—யற்றே
[ தவத்திற் குரு"

எனும் முதுமொழிக் கேற்ப கொல்லாமை யெனுந் தவத்தை யடைந்திருப்பதாலேயாம்.

உலகத்திலே அன்பே அவதாரமாகத் தோன்றி, இருள் சூழ்ந்த உலகமக்களுக்குக் கண்ணீர் விட்டுக் கதறி, புவன போகங்களை யனுபவிக்கும்சிலாக்கியங்களையும் மறந்து, இடம், பொருள், ஏவல், உடல், உயிர் யாவையும் துறந்து, "அன்பின் வழிய துயர் நிலை— அஃதிலார்க் கென்புதோல் போர்த்த வுடம்பு" என்னும் ஜீவகாருண்ய விளக்கத்தை மக்கள் பால் அன்பு கொண்டு விளக்கிய கிருஷ்ணன், புத்தர், மகமது, வள்ளுவர், இராமலிங்க சுவாமிகள், தாயுமான சுவாமிகள், மகாத்மா காந்தி முதலிய பெரியார்களெல்லாம் பிராமண ரல்லாத பெருந்தகையாளர் களன்றோ? "கொலை செய்யா திருப்பாயாக" என்று அவர்கள் கூறும் உபதேசங்களைக் கேட்ட வண்ணம் செய்து பிராமணரல்லாதார் ஏன் திருந்தக் கூடாது? பிராமணர்கள் திருந்தவும், பிராமணரல்லாதார் வருந்தவுமா வேண்டும்? உலகத்திலே பகுத்தறிவிலாப் பிராணிகளை இரக்க மின்றிக் கொலைசெய்யுங் கொடிய வழக்கம் மிகுத்து வர வர மக்கள் சமாதானமாய்ச் சச்சரவில்லாமல் வாழ முடியாது. பழிக்குப் பழி வாங்கும் வேலைகள் தான் மிச்சமாய் நடக்கக் கூடும். அருச்சுனனால் தகிக்கப்பட்ட பாம்பு பழி தீர்க்கக் கர்ணன் அம்புக் கூட்டில் வளர்ந்து வந்த தென்றும், பரிசித்து ராஜன் கடலில் போய் ஒழிந்தும் பாம்பு எலுமிச்சம் பழமாகச் சென்று கொன்ற தென்றும் கதைகளும், சரித்திரங்களும் படித்திருக்கின்றோம். "செய்த வினை செய்தவர்க் கெய்திடும்" என்பதை நாம் நித்திய வாழ்க்கையிற் பார்த்தும் வருகின்றோம். இவ்வாறிருக்க நாம் கொல்லும் ஆடு, கோழிகள் நம்மைக் கொல்ல ஏன் மறு ஜெனன மெடுக்கா தென்று கேட்கின்றோம். அப்படியே ஆகிக் கொண்டு வந்தால் உலகம் எவ்வாறு சமாதானமாக வாழ முடியும். ஆகையால் கோயில்களுக்கு ஆடு, கோழிகள் பலி யிடும் வழக்கத்தை யாவரும் நிறுத்தி வைக்கும்படி கோருகின்றோம். கோயில்கள் வந்த வரலாறுகளைப் பற்றி மற்றொரு முறை எழுதுவோம்.

---

## நன் கொடை

அந்நிய நாடாம் மலாய் நாட்டினோர் பெருநகரமாகிய ஈப்போவில் வசித்து வரும் ஸ்ரீமான் வி. பொன்னையாநாடாரவர்கள் நம்மித்திரனின் க்ஷேமநிதிக்கென ரூ 2—0—0 நன்கொடையாக அனுப்பியுளார்கள். அபிமானப் பெருக்கொடும், அன்புமேலீடு கொண்டும் அனுப்பப் பெற்ற அப்பணத்தையாம் சந்தோஷத்துடன் பெற்று அன்னவருக்கு எமது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றோம்.

---

## தேவஸ்தான நிர்வாகத்திலும் பார்ப்பனீயம்.

"குடி அரசு" உப தலையங்கத்தில் பின் வருமாறு எழுதப்பட்டிருக்கிறது:—

தஞ்சை தேவஸ்தானக் கமிட்டியார் நாடார்களைத் தேவஸ்தானக் கமிட்டி அங்கத்தவர்களாய் நியமிக்கக் கூடாது என்றும், அவர்களுக்குக் கோவிலுக்குள் நுழைய அருகதை இல்லை என்றும் தீர்மானம் செய்து அரசாங்கத்திற்கு அனுப்பி இருக்கின்றார்களாம். இதை என்ன மாதிரி அயோக்யத்தனம் என்று சொல்லுவது என்பது நமக்கு விளங்க வில்லை. இதைப்பற்றி எந்த தேசியப் பத்திரிகையும் எழுதாமல் 'சைமனே திரும்பிப் போ; எல்லாம் நாங்களே சாதித்து விடுகின்றோம்' என்கின்றன. சைமனைத் திரும்பிப் போகச் சொல்லும் சில நாடார் வாலிபர்கள் நாளைக்கு யாரிடம் எதைப் பற்றி சொல்லுவார்களோ தெரிய வில்லை. ஒரு கூட்டத்தார் தங்கள் வயிற்றுப் பிழைப்புக்கும், கூலிக்கும் சைமனை பஹிஷ்கரித்தால் மற்றொரு கூட்டத்தார் தங்கள் அறியாமையால் பஹிஷ்காரப் போலிகளுடைய மாய்கையில் சிக்கி விடுகின்றார்கள். ஐயோ பாவம்!

---

## நாடார் மகாஜன சங்கம், மதுரை.

### ஓர் அறிவிப்பு.

இப்பவும் நமது சங்கம் ட்ராவெலிங் ஏஜெண்ட்டாக வேலை பார்க்க ஒப்புக் கொண்டு திருநெல்வேலி ஜில்லாவில் அம்பா சமுத்திரம் தாலுகாவிற்குப் பிரசாரம் செய்வதற்காகச் சங்கத்திலிருந்து ரசீது புஸ்தகங்களும், அட்வான்ஸ் ரூபாயும் பெற்றுக் கொண்டு 16—11—27-ல் சென்ற ஸ்ரீமான் கே. எஸ். அருணகிரி நாடார் அவர்கள் நாளிது தேதி வரையும் எவ்விதத் தகவலும், கடிதப் போக்கு வரத்துகளுமில்லாமல் ஏதோ சில விடங்களில் தங்கி வருவதாகத் தெரிய வருவதாலும், மோசடியான வசூல்களும் நடந்து வருவதாகச் சமாச்சாரங்கள் கிடைப்பதாலும் அன்னவர் இருக்கும் விலாசத்தை உடனே சங்கம் ஆபீஸுக்கு மகாஜனங்கள் தெரிவிப்பதுடன், அன்னவரின் மோசடியான வசூல்களுக்குத் தப்பித்துக் கொள்ளவும், டையாரை சங்கத்திலிருந்து 1—1—28 தேதி முதல் நீக்கி யிருக்கிறோ மென்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள,
காரியதரிசிகள்.

---

## கள்ளிக்குளம் பால்ய நாடார் சங்கம், கொழும்பு.

கள்ளிக்குளம் பாலிய நாடார் சங்க 5-வது வருட 11-வது மாதாந்தரக் கூட்டம் கடந்த 12—2—28 மாலை 9-30 மணிக்கு உணுட்பெட்டி 5-ம் கிர். கட்டடத்தில் ஸ்ரீமான் வி. இ. மரியமிக்கேல் நாடாரவர்களின் தலைமையின் கீழ் நடை பெற்றது. அவ்வமயம் மிகத் திரளான ஜனங்கள் குழுமியிருந்தனர். ஸ்ரீமான் ச. மி. இ. அந்தோனி நாடாரவர்களால் கடவுள் வணக்கம் பாடப்பட்டது. தலைவரவர்கள் தன் முகவுரையில் "முயற்சியுடையோர் இகழ்ச்சி யடையார்" என்பதைக் கருத்தாகக் கொண்டு சில விஷயங்களை எடுத்துப் பேசினர். பின் ஸ்ரீமான் ச. மி. இ. அந்தோனி நாடாரவர்கள் "ஒற்றுமை" என்பதை எடுத்தோதினர். ஸ்ரீமான் வி. மி. ஜெயநாத நாடாரவர்கள் கல்வியைப் பற்றி எடுத்தோதினர். பின் காரியதரிசியால் வரவு செலவு கணக்கு வாசிக்கப்பட்டதும், முடிவுரையாக தலைவரவர்கள், நம்குலப் பத்திரிகை நம் குலத்திற்காக எத்தனை பிரயாசையோடு ஊழியஞ் செய்கிறதெனவும், ஆகையால் நாடார் குல மக்கள் ஒவ்வொருவரும் அப் பத்திரிகையை அத்தியாவசியமாய் ஆதரிக்க வேணு மெனவும் பேசி முடித்தனர். பின் தேசிய கீதங்களுடன் ராஜ வாழ்த்துக் கூறி கூட்ட மினிது கலைந்ததென கௌரவ பொக்கிஷதார் ஸ்ரீமான் வி. மி. எசுவடிய நாடார் எழுதுகின்றார்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## ஸ்ரீமான் மு. மு. முத்துச்சாமி நாடார் வாசகசாலை.

### 7-வது ஆண்டுவிழா.

### ஆரம்ப ஏற்பாடு.

அருப்புக்கோட்டை மார்ச்சு மீ 5 உ

அருப்புக்கோட்டை ஸ்ரீமான் முதலாளி மு. மு. முத்துச்சாமி நாடார் அவர்கள் ஞாபகச்சின்ன வாசகசாலையின் 7-வது வருடப் பூர்த்திவிழாவை காலை 5-4-28-ல் நடத்தி வைப்பதாகத் தீர்மானித்திருந்தபடி அன்று நகரெங்கும் மகர தோரணங்களாலும் "கல்வரவும் வாழ்த்துதலு" மடங்கிய கமான் தட்டிகளாலும் அலங்கரிக்கப் பெற்றிருந்த காக்ஷி ஜனங்கள் மனதை ஈர்த்து நின்றது. நமது தலைவரவர்கள் உபந்யாசகர்கள் மேல் உள்ள நாட்டத்தாலும் 12-வது மகா நாட்டை இங்கு நடத்திவைக்க வேண்டுமென்ற மார்க்கத் தேட்டத்தாலும் மதுரை மகாஜன சங்க உத்தியோகஸ்தர்கள் வராத வாட்டத்தாலும் வாலிபர்கள், மாணவர்கள், அபிமானிகளின் கூட்டம் அங்கங்கே கூடி பரபரப்பாய் வேண்டிய காரியதரிசிகளைச் செய்து வந்தனர். எதிர் கொண்டழைக்க விருதுநகர் சென்று அன்பர்கள் தலைவரவர்களுடனும் உபந்யாசகர்களுடனும் மதியம் 3 மணிக்கு இவ்விடம் வந்து சேர்ந்தனர்.

### ஆரம்ப வைபவம்.

இரவு 7½ மணிக்கு வாசகசாலையினின்றும் மேளவாத்தியம் யானை முதலிய பரிவாரங்களுடன் தலைவரவர்கள் தங்கியிருந்த சைவபாற க்ஷத்திரிய ஹைஸ்கூலுக்குச் சென்று மரியாதையுடன் வரவேற்று நீண்ட கரகோஷத் தனிடையே ஆரஞ் சூட்டி தலைவர் ஸ்ரீமான் டி. தானியல் தாமஸ் நாடார் அவர்களையும் உபந்யாசகர்களையும் மோட்டார் வாகனத்தில் வைத்து நகர் வலமாகக் கூட்டம் கூடுவதற்காக ஒழுங்குப் பாடுகள் செய்யப்பட்டிருந்த நாடார் எலிமெண்டரி பாடசாலைக்கு அழைத்து வந்ததும் 8½ மணிக்கு கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இடம் போதுமானதில்லை யென்று கூறும் அவ்வளவு ஜனங்கள் ஹாலுக்கு உள்ளும் சுற்றியும் கூடியிருந்தனர். வெளியூரிலிருந்தும் உள்ளூரிலும் பல ஜாதிப் பிரமுகர்கள் விஜயம் செய்திருந்தது குறிப்பிடத் தக்கது.

### கூட்ட நடவடிக்கைகள்.

நண்பர் சிவ. கு. சிவசுப்பிரமணியன் அவர்களால் கடவுள் வணக்கம் பாடப்பட்டதும் ஸ்ரீமான் சொ. ஆ. சொக்கலிங்கபாண்டியரவர்கள் அக்கிராசனரவர்களைப் பிரேரணை செய்ய ஸ்ரீமான் க. அருணாசலம் அவர்கள் ஆமோதிக்கப்பெற்று பாளையங்கோட்டை ஸ்ரீமான் டி. தானியல் தாமஸ் நாடார் அவர்கள் அக்கிராசனத்தமர்ந்தார்கள். அக்கிராசனர் முகவுரைக்குப்பின் காரியதரிசி திருவாளர் பெ. வனுகிநாத நாடாரவர்களால் காரியதரிசி அறிக்கை படிக்கப்பட்டது.

இவ்வாசக சாலைக் கர்த்தராகிய ஸ்ரீமான் முதலாளியவர்களின் ஜீவியத்தைப்பற்றி தமக்குள்ள அனுபோகத்தால் ஹைஸ்கூல் உபாத்தியாயர் ஸ்ரீமான் ஆசீர்வாத நாடாரவர்கள் விரிவாக எடுத்துரைத்ததும் தென்காசி திருவாளர் இ. ப. சுப்பிரமணியதாஸ் அவர்கள் திருவள்ளுவரும், கார்த்தியடிகளும் என்னும் விஷயம்பற்றி சுருக்கமாய்ச் சொல்லின் தமிழ்வேத மெனப் பலராலும் புகழப் பெற்ற திருக்குறளில் சொல்லிவைத்தபடி ஸ்ரீ கார்த்தியடிகள் ஒருவரே தற்போது அனுஷ்டானத்தில் நடத்திவருகிறார்களென்றும் இதனால் ஸ்ரீ கார்த்தியடிகட்கு கிடைத்த பெருமை திருக்குறளை உள்ளூற ஆராய்ந்து அதன்படி நடப்போர்க்கும் உரித்தாகுமென்றும் ஆழ்ந்த கருத்துக் களுடனும் அநேக மேற் கோள்களுடனும் எடுத்துரைத்தார்கள். பின் நாடார் ஹைஸ்கூல் தலைமை ஆசிரியர் திருவாளர் மோசஸ் நாடார் பி. எ. எல். டி. அவர்கள் "கல்வியின் பெருமை" என்னும் விஷயம் பற்றி வெகுநுணுக்கமாய் எடுத்திக் கூறி கல்வியின்றேல் வேறு எச்சாதனமும் பெறுதல் முடியாதென்றும் கல்விஞானம் கிடைத்தால் மட்டும்மக்களாய், ஞானவான்களாய் உலகில் நடமாட முடியுமென்றும் கூறினார்கள்.

மற்றும் தூத்துக்குடி ஸ்ரீமான் மாசிலாமணிபிள்ளையவர்கள் "தாய் நாட்டின் தாகநிலை" என்பது பற்றி ஆவேசமாய் நாளிதுவரை நமது நாடு பட்டு வந்த விருத்தாந்தங்களை விளக்கி, சுதந்திர தாகத்தால் தற்போது நமது நாடு படும் பாட்டையும் விளக்கி அவ்வகையில் நாமெல்லோரும் வகுப்புப் பூசலின்றி ஒரு தாய் பெற்ற பிள்ளைகளேபோல் கூடி வாழ்ந்து சுயராஜ்யவாழ்வு எய்த வேண்டுமென்றும் வெகு உக்ரமாகவும் வேண்டுதலாகவும் கூறினார்கள். "பின் தற்கால நிலைமை" என்னும் பொருள் பற்றி திருவாளர் தி. கருப்பையாபிள்ளையவர்கள் வெகுவாகப் பேசியதில் 12-வது மகாநாட்டை இந்நகரில் நடத்திவைக்க வேண்டிய பிரயத்தனங்கள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் இவ்வூர் தனதனவான்கள் பூரணமாய் இதில் ஒத்துழைத்து புதிய மாதிரியில் மகாநாட்டைச் சிறப்பாய் நடத்தி வைக்க வேண்டுமென்றும் எடுத்துச் சொல்லியது குறிப்பிடத்தக்கது. பின்னர் இவ் வைபவத்தில் தமக்குள்ள சந்தோஷத்தைக் குறித்தும், வாழ்த்துக் கூறியும் வெளியூர்க் கனவான்களெழுதிய கடிதங்கள் வாசிக்கப்பெற்றன. முடிவுரையாக கனம் அக்கிராசனரவர்கள் சொன்னதாவது:—மனிதராய்ப் பிறந்த நமக்கு பகுத்தறியும் குணம் இயற்கையாய் அமைந்துற்றதால் அவசியம் அறிவு வேண்டும். கல்வியின்றேல் அறிவு பெறல் முடியா. எனவே ஒவ்வொருவரும் எச்சாதியினராயினும் கல்வியைத் தேடவேண்டியது கடமையாகும். கல்வியில் கரைகாணவேணும்; படிப்பதால் உத்தியோக ஆசைதான் அதாவது சேவகாபி விருத்திதானே கிடைக்குமென்று எண்ணவேண்டாம். தற்கால முறையில் உயர்தரக் கல்வி கற்று தொழில்முறை நடத்துவதாலேயே அதிக வருவாயும் புகழும் பெறலாகும். விவசாயத்தில் பழயமாமூல் என்று சொல்லி கண்மூடிகளாய்த் திரியாமல் புதிய நவீன முறைகளைக் கையாடி அதிக விளைவுக்கு மார்க்கந் தேட வேண்டியது நம் மேல் விழுந்த கடனாகும். நாம் ஒருவர் மட்டுமல்ல; சகல ஜாதியினரும் முன்னேற்ற மடைய நமது பொது விடங்களில் இடமளித்து அவர்களோடு சுமுகமாய்ப் பழகி அவர்களின் முன்னேற்றம் நம்மதாகக் கருதிப் பாடுபட வேண்டும். இவ்வழியால்தான் நாட்டில் சமாதானம் நிலவும். ஐக்கியம் மேலோங்கும். சுதந்திரம் தானேவரும் என்று சவிஸ்தாரப்படுத்தி இவ்வாசக சாலைதன் முக்கியநோக்கங்களிலொன்றாகிய நமது மகாஜன சங்க ஒத்துழைப்பிற்கிணைய அடுத்து இவண் நடைபெற விருக்கும் நமது 12-வது மகாநாட்டை சிறப்பே நடாத்திவைப்பதற்கான சகல ஏற்பாடுகளும் செய்ய முனைந்து வேலை செய்ய வேணுமென்றும், அதற்கனுகுணமாக இவ்வூர் பிரமுகர்களும் இணக்கவழி நின்று மகாநாட்டை இனிது கூட்டிவைக்க வேணுமென்றும், மகாநாடு சகல விதத்தும் மேம்பாட்டுடன் நடைபெறச் சாதனமாக "நாடார் குல மித்திரன்" பத்திரிகை யுண்டென்றும், இப்பத்திரிகையின் பல பாகப் பரவுதலால் அருப்புக்கோட்டை ஆங்காங்குள்ள நாடார் மக்கள் மனமீர்த்ததொரு நகரமாகுமென்றும், அது காரணமாய் மகாநாடு விஜயமாக ஏராளமானபிரதிநிதிகள்வருவார்களெனவும், எனவே மகாநாடு ஓர் பெரிய குதுகலக்கோஷ்டமாகுமெனவும் கூறி மகாநாட்டுக்குரிய காரியாதிகளை ஆரம்பிக்க வேணுமெனக் கேட்டுக் கொண்டார்.

திருவாளர் அ. கு. அண்ணாமலை அவர்களால் வாசக சாலையின் பழய உத்தியோகஸ்தர்களுக்கு வந்தனங் கூறப்பட்டதும் ஹைஸ்கூல் அஸிஸ்டெண்டு மானேஜர் திருவாளர் ச. ச. பழனிச்சாமி நாடார் அவர்களால் பிரேரிக்கப்பட்டு ஸ்ரீமான் முத்தா நாடார் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு புதிய உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கலாயிற்று. பின் திருவாளர் அ. பெ. இரத்தினவேல் நாடார் அவர்களால் வந்தனோபசாரங் கூறப்பட்டு சுமார் 12-மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது.

---

## செய்தித் திரட்டு.

போல்வியாவில் 120 லட்சம் பவுன் பெறுமானமுள்ள தங்கம், வெள்ளி, வயிரம் முதலியவை பூமியில் புதைக்கப்பட்டிருக்கிற தென்றும், இதை யெடுக்கத் துணிந்தால் உடனே மரண மேற்படு மென்றும் இப்பொழுது கண்டு பிடிக்கப்பட்டு இதை யெடுக்க வென லண்டனில் 26000 பவுன் மூலதனத்துடன் ஒரு கம்பெனி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஜெஸ்யூட்டுகள் 1778-ல் ஜப்பான் கவர்ன்மெண்டால் பிரஷ்டஞ் செய்யப்பட்ட பொழுது இவற்றைப் புதைத்து விட்டுச் சென்றனர். இது சம்பந்தமாக தஸ்தாவேஜி எஸ். ஷீல் ஷர்பர்ட்டு பிராட்ஜர்கள் என்றவரிடம் அகப்பட்டது. அவர் இந்தப் புதையலை யெடுக்க அந்த விடத்திற்குச் சென்ற பொழுது அங்கிருந்த சுதேசிகள் இதை யெடுத்தால் கடவுளுக்குக் கோபம் வந்து உடனே உயிரைப் போக்கி விடுவாரென அவர்கள் பயந்து உதவ மறுத்தன ரென்றும் தெரிகிறது. இதற்குப் பயப்படாத சில ஆங்கிலேயரைக் கொண்டு இந்தப் புதையலை யெடுக்க முயற்சி செய்யப்படுகிறது.

* *

மாயவரம் ஸ்டேஷனில் சுமார் 20 வயதுள்ள வாலிப னொருவன் பெண் வேடந் தரித்து அங்கு மிங்கு முலாவிக் கொண்டிருந்து பின்னர் சென்னைக்குப் போகும் மெயில் ட்ரெயின் வந்த வுடன் அவன் பெண்களுக் கெனப் பிரத்தியேகப்படுத்தி யிருக்கும் வண்டியி லேறினன். அவன் மேல் ஒரு போலீஸ் சம்சயங் கொண்டு அவனை யணுகி அவனுடன் சம்பாஷித்ததில் ஆணெனப் புலனாகி விட மோசக்காரனெப் போலீஸ் ஸ்டேஷனுக்குப் பிடித்துச் சென்றனர். போலீஸ் ஸ்டேஷனில் பரிசோதனை செய்ததில் அவனிடம் ரூபாய் 500-0-0 பெறுமான நகைகளிருந்தன. அந் நகைகள் குற்றாலத்தில் திருடப் பட்டனவாம். அவன் கடப்பையி லிருந்து வந்தவனும். அவன் பெயர் லோகநாதாச்சாரி. பல குற்றங்களில் தண்டிக்கப்பட்டுள்ளவனும்.

* *

மைசூரி னின்றும் நாகபுரிக்குச் சென்று கொண்டிருந்த ஒரு மோட்டார் கார் இடையில் வார்ணு என்னும் ஏரியினண்மையில் திடீரென தீப் பற்றிக் கொண்டது. டிரைவர் காயமாகி குதித் தோடி விட்டார். கார் ஓட்டத்தி லிருந்தமையால் ஏரிக்குள் இறங்கி முழுதும் தீப் பற்றிக் கொண்டது. 6 பேர் எரிந்து போனார்கள். இருவர் காய மடைந்து ஆஸ்பத்திரியில் இறந்தனர். எனவே 8 பேர் எமனுலகு புக்கினர். மோட்டாரில் பிரயாணம் முடிப்பது மறு பிழைப்பு பிழைத்தமாதிரி தான் போலும்!

* *

சீனாவில் மஞ்சள் நதி முகத்துவாரத்தில் வெள்ளப் பெருக் கேற்பட்டு 80 கிராமங்கள் முழுகிப் போய் விட்டன. 20,000 பேர்கள் வீடின்றித் தவிக்கின்றனர்.

* *

இராமநாதபுரம் ராஜாவின் தகப்பனார் ஆர். எம். சுப்பிரமணிய செட்டியார் என்பவரிடம் சில சொத்துக்களை ஈடு காட்டி வாங்கி யிருந்த கடன் தொகை ரூபாய் 3 லக்ஷத்தை வரப் பற்றத் தொடுக்கப்பட்டிருந்த வழக்கில் ராமநாதபுரம் ஸப் ஜட்ஜ் செட்டியாருக் கனுகூலமாக முடிவு செய்ததின் பேரில் ராஜா சென்னை ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார். ராஜாயின் வாதமெல்லாம் ஷ பாக்கி கால கதியாகி விட்ட தென்பதும், அப் பாக்கி சமஸ்தானத்தைக் கட்டுப்படுத்தா தென்பதும் தான். அப்பீல் செய்ததில் கீழ் கோர்ட்டு தீர்ப்பு ஊர்ஜிதம் செய்யப்பட்டு அப்பீல் செலவு தொகை யுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

* *

சென்னை ஏழைப் பாக்கத்தில் மதுரையா என்னும் 30 வயதுள்ள ஒருவர் ஒரு மரத்தின் மீதேறி இலைகளைக் கொய்து கொண்டிருக்கும் போது 25 அடி உயரத்திலிருந்து தவறிக் கீழே விழுந்து காயமடைந்து ஆஸ்பத்திரியில் உயிர் துறந்தார். விதியை வெல்லப் போமோ!

* *

'இன்சிமாரு' என்ற ஜப்பானியக்கப்பல், கொள்ளைக் காரர்களால் தாக்கப்பட்டு சாமான்களெல்லாம் கொள்ளையடிக்கப்பட்டுவிட்டன. கொள்ளைக் காரர் கப்பலைப் பிடிக்க 'மக்னோலியா' என்ற பிரிட்டிஷ் கப்பல் உதவிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

* *

மாஜி இந்தூர் மகாராஜாவின் காதலி மிஸ். மில்லர் நாளிது மார்ச்சு மீ 18 உ இந்துவாவார்.

* *

கல்கத்தா ஈரிகம் பாய் நீக்குச்சி ஆலையில் தீவிபத்தேற்பட்டு இருவர் மரணமானார். சேதம் அதிகமாகும். விபத்திற்கு காரணம் தெரியவில்லை.

* *

லார்டு சின்ஹா தமது கடைசிக் குமாரனைப் பார்ப்பதற்கு பரஹாம் பூருக்குச் சென்றிருந்த போது மாரடைப்பு வந்து மரணமாய்விட்டார்.

* *

மதுரையில் திருநெல்வேலியைச் சேர்ந்த ஸ்ரீ திருநாவுக்கரசு பிள்ளை யென்பார் பக்தி பரவசராய் சென்ற 30 வருடகாலமாய் ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்பர ராலயத்தில் பக்திமார்க்கப் பாடல்கள் பாடி சுவாமி தரிசனம் செய்து சாப்பிடுவது வழக்கமாயிருந்து வருகையில் சென்ற சின்னாட்களுக்கு முன்னர் அக்கோயில் ட்ரஸ்ட்டி இப் பாடல்களைப் பாடக்கூடாதென உத்தரவிட்டிருக்கிறார். இதனால் சுவாமி தெரிசனம் தடைப்பட்டு நாளிது மார்ச்சு மீ 1 உ முதல் சாப்பிடாமல் இருந்து வருகிறார். அப்பிள்ளை பக்தர் இதன்மேல் ட்ரஸ்டியின் உத்தரவின் பேரில் சாசுவத இன்ஜங்ஷன் பிறப்பிக்கும்படி அவ்வூர் ஜில்லா முன்சிப் கோர்ட்டில் மனுக்கொடுத்திருக்கின்றனர். அம் மனுக்கண்டு முன்சீப் அவர்கள் தற்காலீக இன்ஷங்ஷன் பிறப்பித்து ஷை ட்ரஸ்ட்டிக்கும் நோட்டீஸ் அனுப்பியுளார். சாசுவத இன்ஜங்ஷன் தர வாயுதாப்போடப் பட்டிருக்கிறது. என்னே கோயில் ட்ரஸ்ட்டியின் கூத்து!

* *

பம்பாயில் ஒருதச்சர் வீட்டில் எரிந்து கொண்டிருந்த மெழுகுவர்த்தியினால் இரவில் தச்சரது மனைவி 3 குழந்தைகளின் துணிகளில் தீப்பற்றி விட்டது. இது கண்டு தச்சர் கூக்குரலிட பக்கத்துளோர் வந்து தீயை அணைத்தனர். நெருப்புப் பிடித்த மனைவி மக்களை சிகிச்சை செய்ய ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோனதில் 3 குழந்தைகளும் உயிர் துறந்தன. பாவம்! எப்பாடுபட்டனரோ!!

* *

எழுகிணறு வாசியான மிஸஸ். சல்டானா என்ற 28 வயதுள்ள மாது அடுப்படியில் வேலை பார்த்துக் கொண்டிருக்கையில் காக்கை வலிப்பு வந்து விட அடுப்பின்மேல் விழுந்து காயமாகி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டு ஆங்கு மாண்டனள். எமன் உயிர்வாங்கும் சோரம் எம்மட்டும் இருக்கிறது!

* *

சீனா தேசத்தில் 5 லக்ஷம் ஜனங்கள் வசிக்கும் நகரமாகிய வியாங்கில் வேலையினின்றும் நீக்கப்பட்ட சிப்பாய்கள் குடியானவர், பொது உடமைக் கக்ஷியினர் ஆகியவருடன் சேர்ந்து கொண்டு கலகத்திற்கு இறங்கி விட்டார்கள். 300 புத்தமதச் சந்நியாசிகளை ஒரு கோயிலுக்குள் தள்ளிப் பூட்டிவிட்டு அக்கோயிலில் நெருப்பை வைத்து கோயிலையும் சந்யாசிகளையும் கொளுத்தி விட்டனர். பின்னால் அநேகம் பேர்களை வெகுவாய் இம்சித்து சித்திரவதை செய்தனர். கொடுமை! கொடுமை!!

* *

மந்திரிகள் ஸ்ரீ எ. அரங்கநாத முதலியாரும் திவான்பகதூர் ஸ்ரீ ஆரோக்கியசாமி முதலியாரும் கவர்னர் வற்புறுத்தலால் தமது பதவிகளை ராஜிநாமாச் செய்து விட்டார்கள்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## மாஆஹாரப் பிறவியின்
## மாண்பு.

(அருப்புக்கோட்டை ஜீவகாருண்யப் பிரசாரசபையின் 18-வது பிரசுரம்.)

மனிதர்கள், தங்கள் உயிரை வெல்லமாக நினைப்பது போல, மற்றப் பிராணிகளும் நினைப்பது இயற்கை. ஆனால் புசிக்க உணவு புசிப்பவர்களிடம். ஆடு கோழிகளைக் கொன்றுதானா சரீரத்தை வளர்க்கவேண்டுமென்று கேட்டால், சிலர் வேண்டுமென்றே வாதம் பேசினாலும், மிகச் சுருக்கமாய்ப்போய் விட்டது; சிறந்த சேறல் உடைய ஒத்துக் கொள்ளுமென்ற பயத்தைத் தவிர வேறு உயிரைக்கொல்லவேணுமென்ற ஆசையில்லை; அது ஜனங்களுக்கு வெருக்கமாகத் தெரிகிறதென்று பலர் சொல்வதுதான் அவர்களுடைய உண்மையான நம்பிக்கை. இது தவறான எண்ணத்தினால் ஏற்பட்ட நம்பிக்கையாயிருப்பதோடு மனிதன் நினைத்தால் நல்ல காரியம் எதையும் சாதிக்கலாமென்ற வல்லமையைப் பறந்து மனிதனிடமுள்ள தெய்வத்தன்மையையும் இழிவுபடுத்துகிறது. அதாவது மற்ற உயிர்ப்பிராணிகள் வயிற நிரப்புத உடன் வேறு கவலையின்றி, சும்மாயிருப்பது போல மனிதன் இருப்பதில்லை. ஏதாவது யோசனையிலேயே புத்தியைச் செலுத்துகிறான். சரீரத்தை வளர்ப்பதோடு அதற்கும் மேலான ஒரு நிலையை அடைய விரும்புகிறான். தொழில், ஞானம், பொதுஜன சேவை அதன் மூலமாகக் கடவுளையும் பார்க்க ஆசைப்படுகிறான். இந்தக் காரியங்களை யாரும் செய்யாமலிருக்கிறோமா? இல்லை. ஒவ்வொருவரும் செய்துவருகிறோம். அந்த வீரர்கள் மாமிச உணவு இல்லாவிட்டால் சரீரம் மெலிந்து போகுமோவென்று மயங்குவது வீண் பிரமையென்றே சொல்லிவிடலாம். முதலில் அந்த மயக்கத்தை மாற்றவேண்டும். உதாரணமாக ஒவ்வொரு குடும்பத்திலும் அதன் சக்திக்குத்தக்கபடி கல்யாண மூலமாக ஏற்படும் செலவு, பிள்ளைப்பேறு, நகை, உடை, வியாதி, சாவு மற்றும் இதர செலவுகளாலும் அறியாமையாலும் அளவிலாத கஷ்டநஷ்டமேற்படுகிறது. அதில் ஏதாவது ஒரு கஷ்டத்தில் அகப்படாத குடும்பம் உலகத்திலேயில்லை. இந்த உண்மையை ஒவ்வொருவரும் நாள்தோறும் நேரில் அறிந்தும் ராஜன் முதல் கூலிக்காரன் வரை ஏன்—பிச்சைக்காரனும் கூட கல்யாணம் செய்து கொள்வதற்குச் சந்தோஷப்படுகிறான். இவ்வளவு கஷ்டமடைந்தும் மனிதர்கள் கல்யாணத்தில் சலிப்படைவதில்லை. ஏன்? அது தங்கள் கடமையென்று நம்புகிறார்கள். பெரும்பாலும் மிருகங்களும் பக்ஷிகளும் தாய், பிள்ளை பிறவியென்ற வித்தியாசமின்றியே புணருகின்றன. மனிதன் தனக்குள்ள பகுத்தறிவினால் உலகத்தில் சன்மார்க்கத்தை நிலைநாட்டுவதற்காக தனக்கென்று ஒரு பெண்ணை மணந்துகொள்வதால் ஏற்படும் எத்தகைய கஷ்டத்தையும் சமாளிக்கத் தயார் என்று மார் தட்டுகிறான். மனைவியின் கற்புக்கு இனி தானே காவலனென்று உறுதி கூறுகிறான். பொதுவாக விபசாரத்தை எவரும் கௌரவக்குறைவாக எண்ணுவதற்கு காரணமும், ஆறறிவுள்ள மனிதனுக்கும் மற்ற ஜந்துக்களுக்குமுள்ள வித்தியாசமும் இதுதான். இன்றோ நாளையோ அழியும் சரீரத்திற்கே இவ்வளவு யோக்கியப் பொறுப்பும், அதைக்காப்பாற்றுவதற்கு எதையும் தியாகம் பண்ண உறுதியுமே மனிதனுடைய ஜென்மம் மேலான ஜென்மமென்று மெய்ப்பிக்கிறது.

அத்தகைய மேலான ஜென்மமெடுத்த நாம் மாமிசம் தின்னாவிட்டால் சரீரம் என்ன கெடுதல் செய்யுமோவென்று மயங்கலாமா? நிறுத்திவிடத் தயங்கலாமா? கோடிக்கணக்கான பேர்கள் மரக்கறி சாப்பிட்டு சுகசரீரத்தோடு, திடகாத்திரர்களாகவும் இருப்பதை நன்றாய்த் தெரிந்தும் மயங்கவேண்டியதில்லை. பிறரைக்காப்பாற்றத் தங்கள் சரீரத்தையும் தியாகம் செய்யும் மானுஷ ஜாதியில் பிறந்த நாம் மிருகங்கள் பக்ஷிகளுக்கும் மேலான ஜென்மமென்று பெருமை கொள்ளுகிறோம். நமக்குக் கீழான உயிர்களை காப்பாற்றுவதுதான் பெருமையே தவிர, கொல்வது பெருமையல்ல; பெரும் பழி எனவே ஆகாரத்திற்கும் பிற உயிரைக் கொல்லமாட்டோமென்று சபதம் செய்து கொள்ளுவோம்.

எண்பத்து நான்கு லக்ஷம் ஜீவ பேதமுள்ள உயிர்ப் பிராணிகளில் மனிதனைத்தவிர மற்றவைகள் தங்கள் உணவுக்காக மாத்திரம் எப்பொழுதுமே கஷ்டத்தை அனுபவிப்பதில்லை. பூமியில் விளைவதில் அதன் உடம்புக்கு இயற்கையாய் ஒத்துக்கொள்ளும் உணவை உண்டு நாளைக்கு வேண்டுமென்ற கவலையற்றிருக்கிறது. மனிதனே வருஷக்கணக்காக வேண்டிய உணவுக்காக பூமியை உழுது பயிர் செய்கிறான். தோட்டம்வைக்கிறான்; ஆடு, கோழிகள் வளர்க்கிறான்; இன்னும் செய்யும் சகல வேலையும் இச்சிப் பாழும் வயிற்றுக்காகவேதான். என்ன கஷ்டம்! இனறுகிறான். துன்பத்தை நீக்க வழியில்லையா? இருக்கிறது. தற்காலத்திலும் மலையில் வசிக்கும் ரிஷிகளுக்கு யார் சமைத்துக்கொடுக்கிறார்கள்? இல்லை. அங்குள்ள கிழங்கு, காய், கனிகளே ஆகாரம். இதுதான் மனிதனுடைய சரீரத்திற்கு இயற்கை உணவுகளானதால் அதைச் சாப்பிடுகிறவர்களுக்கு வியாதியும் வருவதில்லை. நாகரீகமாக வாழவேண்டுமென்று ஒரு காலத்தில் விரும்பியவர்களில் சிலர் ஆகாரத்தை வேகவைத்துச் சாப்பிட பின்னால் படிப்படியாக ஆசை வளர்ந்து எதையும் தள்ளாமல் சகல பதார்த்தங்களையும் நேரத்திற்கு நேரம் புதுப் புதுப் பக்குவங்களாகச் சாப்பிட்டு எப்போதும் வைத்தியரைத்தேடும் நவீன டம்பாச்சாரி நாகரீகம் வரையும் வந்துவிட்டோம். பாழும் வயிற்றுக்காகப் படும் பாடு கோடானு கோடியிலே எண்ணித் தொலையாப் பாவங்கள் செய்கிறோமே; அதற்கெல்லாம் மறு ஜென்மத்தில் எத்தகைய கஷ்டம் அனுபவிக்கவேண்டிவருமோ! அது போதாதா? கொலையுமா செய்யவேண்டும்? வேண்டாம் வேண்டாம்.

சில ஜாதி மிருகங்கள், பக்ஷிகள் மாம்சம் தின்கிறதே என்று கேட்கலாம். உண்மைதான். அவைகளின் சரீரத்தில் குடல், அலகு, கோரப்பற்கள், மோப்பம் அறியும் சக்தி, வேர்வை கொட்டாமை முதலிய விசேஷ வித்தியாச அமைப்புகளும் தங்களுக்கு வேண்டிய உணவுக்கு உயிரைக்கொன்று அப்படியே தின்னும் குணமும், இயற்கையாய் அமைந்திருக்கிறது. நாம் அத்தகைய மிருகங்களைக் கண்டால் அருவருப்படைவதோடு, பயப்படவும் செய்கிறோம். மனிதனுக்கு இந்த அமைப்புகளில் ஏதாவது ஒன்று உண்டா, அல்லது அவை வேண்டுமென்று விரும்புவோமா? இல்லவே இல்லை.

சரீர அமைப்பில், பழம், காய் கனி, கிழங்கு, ஜீரணிக்கத் தக்க ஆகாரமாயிருந்தாலும், வழக்க பழக்கத்தால் இப்போது மாறியிருக்கிறது. பழவகைகளைக்கண்டவுடனே நமக்கு நாவில் ஜலம் ஊறுகிறது. மூன்று வேளையும் மாமிசம் சாப்பிடுகிறவர்களானாலும் ஒரு நாளைக்குக் கூட பச்சை மாமிசத்தைப் பக்கத்தில் வைத்திருக்க மாட்டார்கள். அம்மட்டோ! ஒரு ஆட்டை இருவர் பிடித்து ஒருவர் அறுத்துப் பின்னால் உரித்து மற்றவர் சமைத்து உண்ணவா வேணும்? இதுவா மனிதனுக்கேற்ற உணவு? இல்லை இல்லை. பிள்ளைபோல் பின்னே கூட்டி வளர்த்த ஆடு, கோழிகளைக்கொல்வது தருமமா? கூடாது கூடாது. போனது போகட்டும். இனியாவது மனிதனுக்கு இயற்கையாய் அமைந்த மரக்கறி உணவை உண்டு க்ஷேமமடைவோம். கொல்லாதீர்கள்; கொன்று தின்னாதீர்கள்.

---

அம்மா வேன் றலறி ஆருயிர் துறந்
(திட

இம்மா நிலத்தோர் இடுகின்ற பலி
(தனை

பெம்மான் உவப்பரோ பிற உயிர்
(வவ்வரோ

சும்மா நீர் எற்றுக்கு சுவாமி பழி
(கொள்கின்றீர்.

---

## இலங்கை
### பாண்டிய நாடார் சங்கம்.

### முதல் ஆறுமாதத்திய அறிக்கை.

நமது சங்கம் சென்ற ஆகஸ்ட் மீ 27-ம் தேதி ஸ்தாபிக்கப்பட்டது. இக்கொஞ்சக் காலத்துக்குள் ஒரு அறிக்கை வெளிப்படுத்துவதென்றால் சுலபமான காரியமல்ல. சங்கம் ஸ்தாபிக்கப்பட்ட இக்கொஞ்ச நாட்களுக்குள், அது சரியான ஸ்திதியில் நிலைநாட்டப் படுவதற்கு அனுசரணையாக அநேக வேலைகளைச் செய்து முடித்திருக்கிறதென்றே சொல்லவேண்டும். சங்கக் கவுன்சிலர்களில் பெரும் பாலோர் ஒவ்வொரு கூட்டத்திற்கும் விஜயஞ்செய்து சங்கத்தின் முன்னேற்றத்திற்கான வழிகளைப்பற்றி 6 கூட்டங்களில் கவனித்தார்கள்.

சங்கத்தின் பேரால் வரும் வருமானத்தை ஓர் பொறுப்புவாய்ந்த விடத்தில் போட்டுவைப்பதே கவுன்சிலர்களின் முதல் வேலையாயிருந்தது. சென்ற பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானப்படி தர்ம கர்த்தாக்கள் பேரால் பணம் போட்டு வைக்க முடியாதென்று ஈஸ்டர்ன் பேங்க் மறுத்ததால் கவுன்சிலர்கள் பேங்க் மானேஜரைக் கண்டு பேசியதன் மூலமாக சங்கத்தின் பேராலேயே பணம் போட்டு வைப்பதற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன. அக்கிராசனர் ஸ்ரீமான் ஜி. பி. ஆர்தரவர்களும், பொக்கிஷதார் ஸ்ரீ பி. ஜே. எட்வர்டு அவர்களும் கணக்கை நடத்தி வருகிறார்கள்.

**ஐக்கிய நாணயக் கூட்டுறவு சங்கம்.** நமது சங்கத்தின் சார்பாக ஓர் ஐக்கிய நாணயக் கூட்டுறவு சங்கம் ஸ்தாபிக்க கவுன்சில் செய்து வந்திருக்கும் வேலை மிகவும் முக்கியமானது. இதனால் தான் நமது சங்கம் உச்சநிலை யெய்தக்கூடுமென்று சொல்வது மிகையாகாது. இதை யொட்டி கவுன்சிலர்கள் அரசாங்க ஐக்கிய நாணயக் கூட்டுறவு சங்க அதிகாரிக்கு எழுதி, இன்ஸ்பெக்டர் ஒருவரின் உதவியையும் பெற்றிருக்கிறார்கள். நமது சங்கத்தின் முற்போக்குக்கு, விசேஷமாக நமது ஜன சமூகத்திற்கு, இத்தகைய கூட்டுறவு சங்கம் அவசியமாயிருப்பதால், அங்கத்தினர் இதையிட்டு அதிக சிரத்தை யெடுக்கக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

**சங்கத்தின் நிலைமை:**—சங்கத்தின் நிலையைப் பற்றிச் சொல்லும்போது அதன் திறமைக்குச் சாதகமாக விருக்கும் இரு விஷயங்களைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். 1. **அங்கத்தினர்.** நமது சங்கம் ஸ்தாபிக்கப்பட்டபின் இதுவரை 60 பேர் சேர்ந்திருக்கின்றனர். அவர்களில் 36 பேர் ஒழுங்காகச் சந்தாச் செலுத்தி வருகிறார்கள். 24 பேர் அங்கத்தினர்களாவோமென்று கையொப்ப மிட்டு, கூடிய சீக்கிரம் சந்தாத் தொகையைச் செலுத்திவிடுவதாகக் கூறியிருக்கிறார்கள். இதையிட்டு அங்கத்தினர் இன்னும் அதிகமான சிரத்தை யெடுத்தால் தான் சங்கம் சடுதியில் மேனோக்கமடையும். சென்ற 5-ம் உ யன்று கவுன்சிலர்களில் சிலர் ஒன்று கூடி வீடுவீடாய்ச் சென்று ஏறக்குறைய 15 அங்கத்தினர்வரை சேர்த்தனர். ரூ 13 ரொக்கம் வசூலாயிற்று. அது சமயம் கவுன்சிலர்களைப் பின் தொடர்ந்து சென்று அதிக உற்சாகங் காட்டிய வாலிப வீரர்களின் அபிமானம் மிகவும் பாராட்டற் பாலது. இவ்விதமான கூட்டுவேலைகளால் அதிகபலன் கிடைப்பதால், இன்னும் அநேக வாலிபர் தங்கள் அபிமானத்தைக் காட்டி ஆதரவளிப்பார்களென நம்புகிறோம்.

2. **பணம்.** பண விஷயத்தைப் பற்றிய பூராவிவரமுமில்லாத அறிக்கை அறிக்கைக் காகாதென்பதை யாவருமறிவர். நமது சங்கம் ஸ்தாபனமான நாள் முதற்கொண்டு நன்கொடை மூலமாயும், சந்தா பிரவேசக் கட்டண மூலமாயும் சேர்ந்த தொகை ரூ 70. பேங்க் வட்டி சதம் 9. ஆக மொத்தம் வரவு ரூ 70 சதம் 9. ரசீதுப் புஸ்தகம், அங்கத்தினர் சேர்க்கும் பாரம் அச்சடித்தல் தபாற்கூலி, ஒய். எம். சி. ஏ. ஹால் வாடகை முதலியவைகளுக்காகச் செலவழிக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ 17 சதம் 76. மீதம் ரூபாய் 52 சதம் 23. இதில் பேங்கிலிருக்கும்ரொக்கம்ரூ46 சதம் 9. தபாற் செலவு முதலியவைகளுக்காக பொக்கிஷதார் கைவசமிருக்கும் தொகை ரூ 6 சதம் 14. பேங்கிலிருக்கும் தொகையை பாஸ் புஸ்தகத்தில் பார்க்கலாம். ரசீது புஸ்தகம் அங்கத்தினர் சேர்க்கும் பாரம் முதலானவைகளை அச்சடிக்கும் செலவும் இதில் சேர்க்கப்பட்டிருந்தபோதிலும், இதற்காக சங்கத்தின் பணத்தைக் கவுன்சிலர்கள் உபயோகிக்காமல், அவர்கள் அதற்காக விசேஷ நன்கொடை செய்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

முடிவில் அங்கத்தினர் கவுன்சிலர்களிடம் ஒப்படைத்த பொறுப்பு மிகவும் நேர்த்தியாக உபயோகப் பட்டிருக்கிற தென்று தடையின்றிச் சொல்லலாம். ஆயினும் அங்கத்தினர்களின் பொறுப்புவாய்ந்த ஒத்துழைப்பு மிகவும் அடிக்கடி அவசியமாயிருக்கிறதென்பதைக் கவுன்சிலர்கள் உணர்ந்தே யிருக்கிறார்கள். அத்தகைய ஒத்துழைப்பு இன்னும் அதிகமதிகமாய்க் கிடைக்குமாயின், சங்கம் சீக்கிரத்தில் பலத்துவிடக்கூடும். இந்தப் பொறுப்பை அங்கத்தினர்களாகிய உங்கள் பாலவிட்டு விட்டு, வணக்கத்துடன் இவ்வறிக்கையை முடிக்கின்றேன்.

ஞா. பா. வேதநாயகம்,
பொதுக் காரியதரிசி.

---

## மதிப்புரைகள்.

### அருட்பா.

வடலூர் ஞானசபையார் வெளியிட்ட இராமலிங்க சுவாமிகள் பாடிய தெய்வ மணிமாலை, போற்றித்திருவிருத்தம், சமரச சன்மார்க்க நிகழ்ச்சிகள் முதலிய சுவடிகள் மூன்று வரப்பெற்றோம். அருட்பாவின் பொருட்சுவையைப்பற்றி அதிகம் எழுதவேண்டியதில்லை. சுவாமிகளுடைய திருவுருவப்படமும் ஞான சபையின் வெளிப்புறத் தோற்றங்களாகிய படங்கள் புத்தகத்திலிணைக்கப் பட்டிருக்கின்றன. சமரச சன்மார்க்கப் பிரசார நிகழ்ச்சிகளைப் பற்றி ஒரு அறிக்கையும் வெளியிட்டிருக்கிறார்கள். ஞான சபையார் முயற்சி பெரிதும் புகழற்பாலது.

ஃ ஃ

### "இந்திய கேசரி."

ஜனவரி வெளியீடு முதற் சஞ்சிகை வரப்பெற்றோம். இதில் அறிவு, தமிழ் மொழி வளர்ச்சி, வீரசக்திமாலை, பண்டைத் தமிழரும் அவர் தம் நாகரீகமும், தன்னயமோ பிறர் நயமோ, திருநீலகண்ட நாயனார், தெய்வ நிச்சயம், காந்தியடிகளின் பொன்னுரை, சத்தி முற்றப் புலவர் சரிதை முதலிய பல அரிய விஷயங்கள் பெரியவர்களால் எழுதப் பெற்று பிரசுரமாகியிருக்கிறது. ஜாதி மத பேத மின்றி யாவரும் வாசிக்கத் தக்க மாதிரியில் வியாசங்கள் முழுதும் வரையப் பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கது.

இதன் ஆசிரியர் மிக ஆற்றலும் அமைதியுமுள்ள நமது நண்பர் ஸ்ரீமான் ஞா. பா. வேதநாயகம் ஆவர். இதன் பெயருக்கேற்ப இந்தியாவிலும் இலங்கையிலும் மிகுந்த கொர்ச்சனை செய்யக் கூடும். வருடச் சந்தா ரூ 1; வெளிநாட்டுச் சந்தா ரூ 1-8-0. ஜீவிய சந்தா ரூ 15.

விலாசம்:—

மானேஜர்,
"இந்திய கேசரி"
தெஹிவிளை
கொழும்பு, சிலோன்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## ஸத்திய தரிசனம்.

மகாத்மா காந்தி ஜீவிய சரித்திரம்.

பாகம் 4. அத்தியாயம் 40.

### சிறு சத்தியாக்கிரகம்.

### பலரை ஏமாற்றுகிற ஒருவன் இறுதியில்தானே ஏமாற்ற மடைவான்.

என்னுடைய கடமை என்று நினைத்தே நான் மகாயுத்தத்தில் கலந்து கொண்டேனாயினும், இதில் நேராகக் கலந்துகொள்ள முடியாமற்போனதுடன் நெருக்கடியான சமயத்தில் சிறு சத்தியாக்கிரகம் செய்யவும் நேரிட்டது. எங்களைப் படையில் சேர்த்துக்கொண்டவுடன் எங்களுடைய போதனை முறையை மேற்பார்வை செய்ய ஒரு உத்தியோகஸ்தரை நியமித்தாரென்று முன்னரே கூறியிருக்கிறேன். இந்த உத்தியோகஸ்தர் தொழில் முறைகள் சம்பந்தப் பட்ட வரை மட்டும் நமக்கு அதிகாரி யென்றும், மற்ற விஷயத்தில் அப்படைக்கு நானே தலைவனென்றும் அறிந்திருந்தோம். அதாவது அந்த உத்தியோகஸ்தர் எதையும் என் மூலமாகத்தான் செய்ய வேண்டுமென்று நாங்கள் நினைத்திருந்தோம். ஆனால் ஆரம்ப முதலே அந்த அதிகாரி எங்களை அந்த முறையில் நடத்தவில்லை.

ஸ்ரீ. சரபோஜி அதஜானியா முன் யோசனையுடன் கூடிய புத்தி கூர்மை யுடையவர். அவர் அந்த உத்தியோகஸ்தரைப்பற்றி எச்சரிக்கையா யிருக்கும்படி தூண்டினார். "அவர் நம் எஜமானர் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார். அவருடைய உத்தரவுக்கு நாம் கடமைப்பட்டில்லை. அவர் நமக்கு போதிப்பவர் என்பதில் நமக்கு ஆக்ஷேபமில்லை. ஆனால் அவர் சில இளைஞர்களை நியமித்து அவர்கள் மூலம் நம்மை ஆளப் பார்க்கிறார்" என்று எனக்கு அறிவித்தார்.

இந்த இளைஞர்கள் ஆக்ஸ்போர்டு கல்லூரி மாணவர்கள். அவர்கள் எங்களுக்குப் போதிக்க வந்தவர்கள். அவர்களைத் தனித்தனி வகுப்பின் தலைவர்களாக அந்த அதிகாரி நியமித்தார். இந்த நிர்வாக அதிகாரியின் கடுமையை நானும் கவனித்திருக்கிறேன். எனினும், நான் ஸ்ரீ. சரபோஜியை அமைதியுடன் இருக்கும்படி சொல்லிவந்தேன். ஆனால் அவர் எளிதில் சமாதான மடையக்கூடியவராக இருக்கவில்லை.

அவர் என்னிடம், "தாங்கள் அதிகம் நம்பிவிடுகிறீர்கள். ஜனங்கள் பசப்பு வார்த்தைகளால் உங்களை ஏமாற்றி விடுகிறார்கள். ஆனால் தாங்கள் அவர்கள் மூலமாகவே அறிந்து கொண்டபின்னர் எங்களை சத்தியாக்கிரகம் செய்யும்படி தூண்டுவீர்கள். இதனால் எங்களையும் உங்களுடன் கஷ்டத்துக்கு ஆளாக்கி விடுகிறீர்" என்றார்.

### ஏமாற்றுபவன் கதி.

அதற்கு நான், "தாங்கள்என்னுடன் சேர்ந்து கொண்ட பின்னர் துக்கத்தைத் தவிர வேறு எதை எதிர்பார்க்க முடியும்? சத்தியாக்கிரகி ஒருவன் ஏமாற்றப்படுவதற்கே பிறந்திருக்கிறான். அந்த நிர்வாக உத்தியோகஸ்தர் நம்மை ஏமாற்றட்டும். ஏமாற்றுகிற ஒருவன் இறுதியில் தானே ஏமாந்துவிடுவான் என்று நான் பல முறையும் தங்களுக்கு அறிவித்திருக்கவில்லையா?" என்று கூறினேன்.

இதைக்கேட்ட சரபோஜி உரக்கச் சிரித்த வண்ணம், "அப்படியானால் ஏமாந்து கொண்டே இரும். என்றைக்காவது ஒரு நாள் தாங்கள் இந்த சத்தியாக்கிரகத்தில் தான் உயிர்விடப் போகிறீர்கள். என்னைப் போன்றவர்களையும் தங்கள் பின்னால் இழுத்துச் செல்லுங்கள்" என்று கூறினார்.

இவ்வாறு இவர் கூறியபோது முன்பு ஒத்துழையாமையைப் பற்றி காலஞ்சென்ற ஸ்ரீமதி, எமிலி ஹாப்ஹவுஸ் "உண்மைக்காகப் பாடுபடுவதில் தாங்கள் உயிர்விடும்படி நேரிட்டால் நான் திகிலடைவதற்குக் காரண மொன்று மில்லை. கடவுள் தங்களுக்கு நல்ல வழியைக் காண்பித்துக் காப்பாற்றுவாராக" என்று எழுதியிருந்த விஷயம் ஞாபகத்துக்கு வந்தது.

எங்கள் நிர்வாக அதிகாரியை நியமித்த சில தினங்களுக்குள் தான் நானும் சரபோஜியும் இவ்வாறு பேசினோம். ஆனால் நாங்கள் பேசிய சில தினங்களுக்குள் நம்முடைய சம்பந்தம் நீங்கும் காலம் நெருங்கிவிட்டது. நான் தேகாப்பியாசம் செய்ய ஆரம்பித்தபடியாலும், இரண்டு மைல் தூரம் நடக்க ஆரம்பித்ததாலும் பதினைந்து நாள் உபவாசம் செய்ததால் எனக்கேற்பட்டிருந்த பலஹீனம் நீங்கி பழைய பலம் எனக்கு வந்து கொண்டிருந்தது. இவ்வித நிலைமையில் வாரக் கடைசியில் செய்யவேண்டிய முகாமுக்குப் போக நேரிட்டது. மற்றவர்கள் அங்கு தங்கி யிருக்க நான் மட்டும் வீட்டுக்குத் திரும்பினேன். அப்போது தான் சத்தியாக்கிரகத்துக்கு ஒரு காரணம் ஏற்பட்டது.

### தொண்டர்கள் வெறுப்பு.

அக்காலத்துக்குள் எங்கள் நிர்வாக அதிகாரி இன்னும் தாராளமாக அதிகாரம் செய்ய ஆரம்பித்து விட்டார். அவர் ராணுவ சம்பந்தம் பெற்றதும் பெருததுமான விஷயங்களிலும் எங்களுக்கு எஜமானன் என்பதைக் காட்டிக் கொண்டார். சரபோஜியும் என்னை அவசரப்படுத்தினார். அவர் அந்த அதிகாரியினுடைய கொடிய ஆட்சியில் இருக்க விரும்பவில்லை. அவர் என்னிடம் "நாங்கள் எந்தக் கட்டளையையும் தங்கள் மூலம் பெற விரும்புகிறோம். நாங்கள் இன்னும் போதனை முறைக்குள்ளேயே இருந்தும் பலவிதமான கேவல கட்டளைகளெல்லாம் எங்களுக்கு இடப்படுகின்றன. எங்களுக்கும் எங்களுக்குப் போதிப்பதற்காக நியமிக்கப்பட்ட இளைஞர் களுக்குமிடையே அதிக வித்தியாசம் பாராட்டப் படுகின்றது. இவ்விஷயத்தை நிர்வாக அதிகாரியிடம் கூறிவிடவேண்டும். இந்திய மாணவர்கள் எப்படிப்பட்ட கேவல உத்தரவுகளுக்கும் கீழ்ப்படியத் தயாராயில்லை. சுயமரியாதையைக் குறித்தே நாங்கள் யுத்தத்தில் கலந்து கொண்டோமாதலால் அந்த சுயமரியாதையை இழக்க நாங்கள் சிறிதும் இணங்கமாட்டோம்" என்று கூறினார்.

நான் அந்த நிர்வாக உத்தியோகஸ்தரை யணுகி என்னிடம் அறிவித்த முறையீடுகளைப்பற்றிக் கூறினேன். அவர் நான் கூறியதை எழுதிக் கொடுக்கும்படி கேட்டதுடன் அவர்களுடைய குறைகளை இனி அவர் நியமித்திருக்கும் வகுப்பு அதிகாரிகளின் மூலமாகவே சொல்லிக் கொள்ள வேண்டுமென்றும் கூறினார்.

அதற்கு நான், எத்தகைய அதிகாரத்தையும் விரும்பவில்லை யென்றும், ராணுவம் சம்பந்தப் பட்டவரை நானும் ஒரு தனி மனிதனுக்கு ஒப்பானவனே என்றும், ஆனால் அந்தத் தொண்டர் படையின் தலைவர் என்கிற முறையில் அவர்களுடைய பிரதிநிதியாக இருக்க அனுமதிக்க வேண்டுமென்றும் கூறினேன். மேலும், நான் என்னிடம் அறிவிக்கப் பட்ட தொண்டர்களின் முறையீடுகளையும் அவருக்கு அறிவித்தேன். அதாவது தொண்டர்களின் இஷ்டத்தைக் கேட்காமல் வகுப்பு அதிகாரிகளை நியமித்த விஷயத்தில் அவர்களுக்குத் திருப்தி இல்லை என்றும், இப்போதுள்ள அதிகாரிகளை விலக்கி விட்டு படையினரையே தேர்ந்தெடுக்கும்படி சொன்னால் அவர்கள் தங்களுக்கேற்றவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வார்களென்றும் அறிவித்தேன்.

நான் கூறியதெல்லாம் நிர்வாக அதிகாரியின் செவியில் ஏறவில்லை. மேலும் வகுப்பு அதிகாரிகளைப் படையினர் தேர்ந்தெடுப்பதென்பதும், அப்போது நியமிக்கப்பட்டவர்களை விலக்குவதென்பதும் ராணுவ ஒழுங்கு முறைக்கு முரணான தென்றும் கூறி விட்டார்.

### சத்தியாக்கிரக ஆரம்பம்.

எனவே, நாங்கள் ஒரு கூட்டங் கூடி தொண்டர் படையிலிருந்து விலகிக்கொள்வதென்று தீர்மானித்தோம். ஆனால் சத்தியாக்கிரகம் செய்வதிலுள்ள துன்பங்களைப் பற்றியும் நான் அவர்களுக்கு எடுத்துக் கூறினேன். எனினும் பெரும் பான்மையோர், இப்போது நியமிக்கப் பட்டுள்ள வகுப்பு அதிகாரிகளை விலக்கி விட்டு படையினரையே தேர்ந்தெடுத்துக் கொள்ள சந்தர்ப்பம் கொடுக்காவிட்டால் இனி தொண்டர்கள் தேகாப்பியாச வகுப்புக்கும், வார இறுதி முகாமுக்கும் செல்வதில்லை என்று தீர்மானித்துவிட்டார்கள்.

பிறகு நான் அந்த நிர்வாக உத்தியோகஸ்தருக்கு என் யோசனைகளை மறுத்து அவர் பதில் எழுதியதால் நான் எவ்வளவு ஏமாற்றமடைந்தேன் என்பதை எடுத்துக் கூறி நான் அதிகாரத்தைச் சிறிதும் விரும்பவில்லை யென்றும், சேவை செய்யவேண்டுமென்பதே என் பிரதான நோக்கமென்றும், அறிவித்ததுடன் முன் தென்னாப்பிரிக்காவில் நடந்த விஷயங்களையும் அங்கு போயர் யுத்தத்தில் கர்னல் கால்வே எதையும் என் மூலமாகவே செய்தபடியால் அக்கர்னலுக்கும் தொண்டர் படைக்கும் எவ்வித மனஸ்தாபமும் தோன்றவில்லை யென்பதையும் எடுத்துக் காட்டினேன். அன்றியும் அதற்கு முன்னால் தொண்டர்கள் செய்த தீர்மானத்தையும் எழுதியனுப்பினேன். எங்கள் கூட்டத்தையும் தீர்மானத்தையும் அவர் ராணுவ ஒழுங்கு முறைக்கு முரணான தென்று கருதியபடியால் நான் எழுதிக்கொண்டதால் எவ்வித பயனும் விளையவில்லை.

பின்னர் நான் இந்தியா மந்திரிக்கு ஒரு கடிதம் எழுதி எல்லா விஷயங்களையும், எங்கள் தீர்மானத்தையும் அறிவித்தேன். அவர் எனக்கு எழுதிய பதிலில் தென்னாப்பிரிக்கா நிலைமை வேறு என்றும், சட்டப்படி வகுப்பு அதிகாரிகளை நியமித்து விட்டபடியால் இனி அவர்களை நியமிக்கும் சந்தர்ப்பங்களில் என் சிபார்சைக் கேட்டே எதையும் செய்வதாகவும் எழுதியிருந்தார்.

எங்களுக்கிடையில் அதிகமான கடிதப் போக்குவரத்து நடந்தது. ஆனால் இந்தக் கதையை நான் நீடிக்கச் செய்ய விரும்பவில்லை. என் அனுபவம் அப்போது இந்தியாவில் தினசரியும் நாம் அடைந்துள்ள அனுபவமாகவே இருந்தது. எங்கள் படையிலேயே பிரிவினையை உண்டாக்கி விடுவதற்காக அந்த நிர்வாக உத்தியோகஸ்தர்கள் பல அச்சுறுத்தல்களாலும், அதிகார தோரணையாலும் [illegible]

...குச் சாதகமாய் ஓட் செய்த பலர் அதிகாரிக்குப் பயந்துகொண்டு வாக்குறுதியை நிறைவேற்றப் பின் வாங்கி விட்டார்கள்.

### எங்கள் வெற்றி.

அச் சந்தர்ப்பத்தில் நெட்லே ஆஸ்பத்திரிக்கு அதிக தொகையை யுடைய அடியுண்ட யுத்தவீரர்களைக் கொண்டு வந்தார்கள். எனவே, எங்கள் படையின் உதவி அதிகமாக தேவையாயிருந்தது. ஆனால் தொண்டர்களில் சிலர் நிர்வாக அதிகாரியின் பசப்பு வார்த்தைகளுக்கும், மிரட்டல்களுக்கும் இணங்கி நெட்லே ஆஸ்பத்திரிக்குச் சென்றார்கள். மற்றவர்கள் மறுத்து விட்டார்கள். நானும் போகவில்லையாயினும், இதர மெம்பர்களுடன் கடிதப் போக்குவரத்து நடத்தி வந்தேன். இந்தியா உதவி மந்திரியாயிருந்த ஸ்ரீ ராபர்ட்ஸ் அக்காலத்தில் பல முறை என்னுடன் நேரில் பேசி என்னைக் கண்ணியப் படுத்தினார். அவர், எல்லாரையும் தொண்டுபுரியச் சொல்லும்படி என்னைத் தூண்டினார். அவர் நெட்லே ஆஸ்பத்திரியின் சேவைக்கென்று மட்டும் தனியே ஒரு தொண்டர் படையை வகுத்து, அப்படைக்கு நிர்வாக உத்தியோகஸ்தர் மட்டுமே நேரான அதிகாரியிருப்பாரென்றும், அதனால் சுயமரியாதை இழத்தலென்னுங் சங்கடமில்லை யென்றும், அந்த ஆஸ்பத்திரியிலும் அதிக தொண்டு நிறைவேறு மென்றும் கூறினார். அவர் கூறியது எனக்கும் என் நண்பர்களுக்கும் திருப்தியை யளித்தது. அதன் பயனாக விலகிக் கொண்டிருந்தவர்களும் நெட்லே ஆஸ்பத்திரிக்குத் தொண்டு புரியச் சென்றார்கள்.

நான்மட்டும் வெளியே இருந்து அசௌகரியங்களை யெல்லாம் சௌகரியமாகச் செய்து வந்தேன்.

## தாழ்ந்த வகுப்பார் கல்வியபிவிருத்தி.

### இந்தியாச் சட்டசபையில் ஸ்ரீமான் வாஜ்பேயர் வாய்மொழி.

ஆரம்பக் கல்வி விஷயத்தில் தான் பணம் அதிகமாகச் செலவழிக்கப்படுகிறது. 1917-ம் வருஷத்தில் தாழ்ந்த வகுப்பு மாணவர்களின் தொகை இந்தியாவெங்கும் 195000 ஆகவிருந்தது. 1926-ம் வருஷத்தில் 667000 பேர் ஆகிவிட்டனர். சென்னையில் 114000 மாணவர்கள் 209000 மாணவர்களாக உயர்ந்தனர். பம்பாய் 28000 இருந்து 55000 பேர் ஆக உயர்ந்தது. பர்மாவிலும் அஸ்ஸாமிலும் தாழ்ந்த வகுப்பினர்களே இல்லையெனச் சொல்லப்படுகிறது. சீர்திருத்தச் சட்டம் அமுலுக்கு வந்த பின் இவ்வளவு உயர்ந்திருக்கிறது. பொதுப் பாடசாலைகளில் தாழ்ந்த வகுப்பு மாணவர்கள் பலர் படித்து வருகின்றனர். உயர் வகுப்பினரும் இப்போது தாழ்ந்த வகுப்பினருக்கென ஏற்பட்ட பாடசாலைகளில் சேர வருகின்றனர். தாழ்ந்த வகுப்பினரின் கல்வியை உயர்த்துவதற்காக மத்திய மாகாணத்தில் தலைமை உபாத்தியாயர்களுக்குப் பரிசும் கொடுக்கப்படுகிறது. பம்பாயில் இவர்களின் சவுகரியத்தைக் கவனிப்பதற்கென ஒரு தனி உத்தியோகஸ்தரிருக்கிறார். சென்னையில் தொழிற் கமிஷனர் இவ்வேலைகளைக் கவனித்து வருகிறார். ஆகவே இதிலிருந்து மாகாணக் கவர்ன்மெண்டுகள் தங்கள் பொறுப்பை உணர்ந்திருப்பதாகவே தெரிகிறது. சகிப்புத் தன்மையும் பற்பல வகுப்பினரிடையிலும் அதிகப்பட்டு வருகிறது. தாழ்ந்த வகுப்பினர்களின் கல்விக்கென விசேஷ ஏற்பாடு செய்யவேண்டிய அவசியமே யில்லாது போகக் கூடிய ஒரு நிலை சீக்கிரத்தில் ஏற்பட வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன். இங்கு நடக்கும் விவாத விவாதத்தை நான் மாகாணக் கவர்ன்மெண்டுகளுக்கு அறிவித்து விடுகிறேன்.

(2-ம் பக்கத்தின் தொடர்பு)

நேட்டாலிலுள்ள ஒப்பந்தத் தொழிலாளிகளும், சுதந்திர இந்தியர்களும் மேற்கூறியவையல்லாமல் சட்டத்துக்குள்ளாகவும் புறம்பாகவும் இன்னும் பல நிர்ப்பந்தங்களுக்கும் உள்ளாகியிருந்தனர்; இன்னும் உள்ளாகி யிருக்கின்றனர். ஆனால் அவற்றை யெல்லாம் கூறி வாசகர்களைச் சிரமப்படுத்தல் அவசியமில்லை யென்று கருதுகிறேன். விஷயத்தைத் தெளிவாக அறிந்து கொள்வதற்கு அவசியமான விவரங்களை மட்டும் தரவே நான் உத்தேசித்திருக்கிறேன். தென்னாப்பிரிக்காவில் பற்பல பகுதிகளிலும் வசித்த இந்தியர்களின் நிலைமையைப் பற்றிய சரித்திரத்தைக் கூறப்புகின் பெரிதும் வளர்ந்துவிடும். இப்புத்தகத்தில் அஃது இடம்பெற முடியாது.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection